# இந்திய பூபதிகள்

## — — சரிதை — —

4
191

T. V. கணேசன், B. A., L. T.

# இந்திய பூபதிகள் சரிதை

சென்னை,

பச்சையப்பன் கல்லூரிப் பள்ளிக்கூடச் சரித்திர ஆசிரியர்

**T. V. கணேசன், B. A., L. T.,**

எழுதியது

சென்னை:

சி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1930

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 6 அணா

Printed at
The 'Caxton Press'
Madras.

# முகவுரை

பாரதகண்டமாகிய நம் இந்தியா தேயத்தில் அனேக பெரும் வேந்தர்கள் செங்கோல் செலுத்தி வந்தனர். அவர்களிடம் அனேக அரிய குணங்கள் பொருந்தி இருந்தன. அத்தகைய பூபதிகளுள் சிறந்த எழுவரைப்பற்றி, இச்சிறு புத்தகத்தில் எழுதியுள்ளேன். ஒவ்வொருவரிடமும், ஒவ்வொரு அரிய குணம் பொருந்தி இருத்தலாலும், நமது இந்துதேச சரித்திரத்தில் இத்தகையோரைப்பற்றி விபரமாய்ச் சிறுவர்களுக்குப் போதிக்க அவகாசமில்லாமைபற்றியும் இங்கு அன்னோரது சரித்திரங்களை மிகைப்படாமல் நமது சிறுவர்கள் எவ்வளவு தெரிந்து கொள்ளக்கூடுமோ, அவ்வளவே எழுதப்பட்டிருக்கின்றது. அசோகன் மிகப்பெரிய இராஜ்யத்தை யாண்டான். அவனது அரசியல் திறன் மிக்க மாண்புடையது. ஆயினும் அவனுக்கு மதாபிமானம் அதிகமாக விருந்தது. அரசனாயினும் புத்த சந்நியாசியாக விளங்கினான். இங்கு எழுதப்பட்டிருக்கும் எழுவரில், காலத்தை நோக்கின், அவனே முதல்வனாதலால் அவனைப்பற்றி முதலில் எழுதப்பட் டிருக்கின்றது. ஹர்ஷனிடம் சகோதரவாஞ்சையும், மதத்துவேஷமின்மையும் குடிகொண்டிருந்தன. சளுக்கிய விக்கிரமாதித்தன், ஒரு அஞ்சாநெஞ்சன்; திக்கு விஜயம்செய்து ஜெயக்கொடி நாட்டியதீரன். இராஜஇராஜசோழன் அரசியல் மாண்புடன் கட்டடங்கள் கட்டுவிப்பதில் மிகத்தேர்ச்சியுடையான். கிருஷ்ணதேவர் நாளிலோ தென்னிந்தியா ஒரு வியாபாரஸ்தலமாக விருந்தது; கல்வி விருத்தி உண்டாயிற்று தெலுங்கு பாஷை மிகவும் தேர்ச்சியடைந்தது. சிவாஜியின் பராக்கிரமமும் போர்த்திறனும் அனைவருக்கும் தெரிந்தனவே.

ரஞ்சித்சிங்கனைப் "பஞ்சாப் சிங்கன்" என்றும் கூறுவார்கள். அவன் ஒரு பெரிய இராஜதந்திரி. ஆங்கிலேயரும் அவனிடம் மரியாதையாக நடந்துகொண்டனர். ஆகவே, இவ்வெழுவரும் இந்தியாவில் ஆண்ட மன்னர்களுள் சிறந்தோர் எனலாம். அதுபற்றியே இவ்வெழுவரைப்பற்றி எழுதலாயிற்று.

இச்சிறு புத்தகத்தில் உள்ள குற்றங் குறைகளை, அறிஞர் பொறுத்தருளும்படி அன்னோரைவேண்டுகின்றனன்.

அச்சுப் பிரதிகளைத் திருத்துவதில் எனக்கு மிகவும் உதவி புரிந்த பச்சையப்பன் கல்லூரிப் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கன்னைய நாயுடு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி செலுத்துகின்றேன்.

சென்னை நகர்
31-12-'29.

T. V. கணேசன்

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அசோகன் | 1 |
| 2. | ஹர்ஷன் | 10 |
| 3. | இராஜஇராஜ சோழன் | 20 |
| 4. | சளுக்கிய விக்கிரமாதித்தன் | 29 |
| 5. | கிருஷ்ணதேவராயர் | 35 |
| 6. | சிவாஜி | 46 |
| 7. | ரஞ்சித்சிங்கன் | 65 |
| 8. | அருஞ்சொற் குறிப்பு | 78 |



அசோகன்

# இந்திய பூபதிகள் சரிதை

## 1. அசோக மகாராஜன்

நமது பரத கண்டமாகிய இந்தியா தேயத்தின் கண் அனேக மாட்சிமை பொருந்திய மன்னர்கள் செங்கோல் செலுத்தி வந்தனர். அவர்களில் முதன்மை யானவன் அசோகனே. அசோகன் கி. மு. 278-ல் சிங்காதனம் ஏறினான். அவன் இந்தியாவில் நந்தர்களுக்கப்புறம் மகதநாட்டை ஆண்டுவந்த மௌரிய வம்சத்தில் பிறந்தவன். அசோகன் மௌரிய வம்சத்தினரில் முதலில் ஆண்ட சந்திரகுப்தனது பேரனும் பின் ஆண்ட பிந்துசாரனது தனயனும் ஆவன்.

அசோகன் சிங்காதனம் ஏறியபின், ஒன்பது ஆண்டுகள் வரையில் ஒரு விசேட சம்பவமும் நடக்கவில்லை. மிக்க செம்மையாக இராஜ்பத்தை அவன் ஆண்டு வந்தான். ஆனால் கி. மு. 269-ல் அசோகன், மகத நாட்டிற்குத் தெற்கேயுள்ள கலிங்க நாட்டுடன் (Modern Orissa) சமர் செய்ய நேரிட்டது. அப்போரில் அனேக மாயிரம் போர்வீரர்கள் மடிந்தனர். அசோகனது கல்வெட்டு சாஸனத்தில் இறந்தவரது தொகையைப் பற்றிக் கீழ் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "லக்ஷத்து ஐம்பதினாயிரம் ஜனங்கள் இப்போரில் கைதியாக்கப்பட்டனர். மற்றொரு லக்ஷம் மாண்டனர்."

அசோகன் மன்னன் சுபாவத்திலேயே தாராள சிந்தையும் அன்பும் குடிகொண்டவன். எண்ணில்லா ஜனங்கள் கலிங்க யுத்ததில் மாண்டதை உன்னி உன்னி அவன் மிகவும் துக்கித்தான். அப்படியிருக்கும சமயத்தில் அவனுக்குச் சில புததமத பாதிரிகளின் நட்பு உண்டாயிற்று. அவர்களுடன் அம்மதத்தைப் பற்றிப் பேசியதில் அதன் கொள்கைகள் அவன் மன திற்கு மிகவும் ஒத்திருந்தன. ஆதலால் கலிங்க யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆவதற்குள் அவ்வரசன் புத்த மதத்தைத் தழுவினன். புத்த சங்கத்தைச் சேர்ந்து புத்த மதக் கொள்கைகளைச் சரிவர அனு சரிப்பதாகவும், பரவச் செய்வதாகவும் அவன் சத்தியம செய்துகொண்டான். அதுமுதல் அவனது ஊக்கம் அச்சமயத்தை விருத்தி செய்வதிலேயே இருந்தது. தன் நாட்டுத் திரவியங்களைப் புத்த மதத்தைப் பரவச் செய்வதில் விசேடமாகச் செலவழித்தான். புதத மதத்தைப் பரவச்செய்வதற்கும், அதன் கொள்கைகளை ஜனங்களுக்கு நன்குக அறிவிப்பதற்கும அனேக குரு மார்களைச் சிங்களம், சேர சோழ பாண்டி நாடுகள், மகாராஷ்டிரம், இமய பிரதேசம, காஷ்மீரம், பெகு முதலிய இடங்களுக்கு அனுப்பினன். அவ்விடங்களில் அசோகனது முயற்சிக் கேற்ப அனேகமாயிரம் ஜனங் கள் புத்த மதத்தைத தழுவா விட்டாலும, புத்த மதம் பரவுவதற்கு வேண்டிய ஒரு அஸ்திவாரத்தைப் பலமாக அக்குருமார்கள் போட்டார்கள். இற்றைக் கும் சிங்கள நாட்டில் புத்தமதம் செழித்தோங்கி யிருப் பதற்குக் காரணம் அசோக மகாராஜனது முயற்சியே. கௌதம புதத சாக்கிய முனி இறந்தபொழுது புத்த மதம் ஒரு சார்பினரால் தழுவப்பட்டு மகத நாட்டிலும்

கோசல நாட்டிலும் சில பாகங்களிலேயே பரவியிருந்தது. ஆனால் அசோகனது நாளில் அது ஒரு பெரிய மதமாகவும், இந்தியா தேயத்திலும், அயல் நாடுகளிலும் அனேக மாயிரம் ஜனங்கள் அதை அனுசரிக்கவும் ஆயிற்று.

அசோகன் பட்டத்திற்கு வந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆனவுடன், அதாவது கி. மு. 265-ல் புத்த மதத்தைப் பரவச் செய்வதற்காக மாகாணத் தலைவர்களை ஒரு சபை கூட்டி, அங்குப் புத்தமதக் கொள்கைகளையும், அஹிம்சையையும் பற்றி விவரமாய்ப் பிரசங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்தான். அனேக இடங்களில் இப்படிப்பட்ட சபைகள் ஐந்து வருடங்களுக்கொருமுறை கூட்டப்பட்டன. புத்த மதம் தழுவப்பட்ட இடங்களில், ஜனங்கள் அதன் கோட்பாடுகள் பிரகாரம் சரியாக நடந்து வருகிறார்களா என்று பார்ப்பதற்கு 'தர்ம மகா மாத்ர' என்னும் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் புத்தமதத்தைப் பரவச் செய்வதன்றி ஜனங்களில் எல்லா ஜாதியாரும் சந்தோஷமாகவும், சுகமாகவும் குற்றம் குறைகளின்றிக் காலம் கழிக்கும்படி பார்த்தும் வரல் வேண்டும். முக்கியமாக அவர்கள் ஏழை மக்களையும் வயதானவர்களையும் கவனிக்க வேண்டுமென உத்தரவு பெற்றிருந்தார்கள். மற்றும் அநியாய தண்டனைகள் எங்கேனும் விதிக்கப்பட்டால் அவைகளைத் தடுக்கவும், குற்றவாளி வயதானவனாகவோ, அல்லது பெரிய குடும்பமுள்ளவனாகவோ, அல்லது திடீரென்று ஒரு பெரிய கஷ்டத்தை அடைந்தவனாகவோ இருந்தால், கடுந்தண்டனை விதிக்காமல் அவனை மன்னிக்கவும் அவர்

களுக்கு அசோகன் உத்தரவு கொடுத்திருந்தான். தர்மம் தானம் முதலியவைகளை மேற்பார்வை பார்க்கவும் ஓர் உத்தியோகஸ்தன் ஏற்படுத்தப்பட்டான்.

அசோகன் தன் நாட்டிலுள்ள மிருகங்களும் மனிதர்களும் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்க அனேக ஏற்பாடுகள் செய்தான்; அனேக சாலைகள் போட்டு அவைகளின் இருபக்கங்களிலும் நிழல் தரும் மரங்களையும், நல்ல பழ மரங்களையும் வைத்தான்; கிணறுகள் அனேகம் வெட்டினான்; தங்குமிடங்கள் கட்டினான். மாடுகளுக்குத் தண்ணீர் காட்ட அனேக ஊற்றுகள் வெட்டினான். தேச நன்மையும் செழுமையும் விவசாயத்தாலே யாதலால் அவ் வுழுதொழிலை நன்கு கவனித்தான். அவன் காலத்தில் சாகுபடிகள் நன்றாக நடந்தன. பொக்கிஷத்திலிருந்து பணம் கொடுத்து ஏழை மக்களுக்கு உதவிசெய்து தரிசல் நிலங்களையும் சாகுபடிக்குக்கொண்டுவரப் பலவித ஏற்பாடுகள் செய்தான். பலவித மூலிகைகளையும் வேர்களையும் அநேக இடங்களினின்று கொண்டுவரச்செய்து, அவைகளைத் தன் நாட்டில் பயிரிடச் செய்தான்.

அசோகனது கல்வெட்டு சாஸனங்களில் ஒன்றாகிய இராணியின் சாஸனத்தைப் படித்துப் பார்த்தால் அவனது பெருந்தன்மையும், ஜீவகாருண்யமும் அரசாங்கத்தில் அவன் மனப்பான்மையும் நன்கு விளங்கும். அதில் எழுதியிருப்பதாவது; "எல்லா ஜனங்களும் அரசனது மக்களே. ஆதலால் அவர்கள் தகப்பனுக்கு எவ்வாறு கீழ்ப்படிந்து நடப்பார்களோ, அவ்விதமே அரசனுக்கும் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும். அரசனும் ஜனங்களது சௌகரியங்களைத் தகப்பன்போல்

பார்த்துச் செய்யவேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பொறாமை, கடுமை, பொறுமையின்மை முதலிய கெட்ட குணங்களை அறவே ஒழித்து நடுவு நிலைமையைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். சோம்பலில்லாமலும், ஊக்கத்துடனும் அவரவர்களது கடமைகளைச் செய்யவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் அரசனது அன்பை இழந்து தண்டனைக் குள்ளாவார்கள்.''

அசோகன் கி. மு. 267 லிருந்து, அதாவது புத்த சமயத்தைத் தழுவியது முதற்கொண்டு, வேட்டைக்குச் செல்வதற்குப் பதிலாக, யாத்திரைகள் செய்யவும் புத்தமதத்தைப் பரவச் செய்யவுமே வெளிச் சென்றான். வேட்டையாடுவதை அறவே ஒழித்துவிட்டான். புத்தமதக் கொள்கை பிரகாரம் ஜீவஹிம்சை கூடாதல்லவா? கி. மு. 265 முதல் அரண்மனையில் புலால் உணவு கூடாதென்றும், மிருகங்களை அரண்மனையில் மாத்திரமன்றித் தன் தலைநகராகிய பாடலிபுத்ரம் முழுதும் கொல்லவே கூடாதென்றும் கண்டிப்பான கட்டளையிட்டான்.

மரண தண்டனை விதிப்பது மிகவும் அரிதே. அப்படி விதிக்கப்பட்ட காலையும் குற்றவாளிக்கு மூன்று நாட்கள் தவணை கொடுக்கப்பட்டன. அவை, கடவுளை வணங்குவதற்கும், பந்துமித்திரர்களிடம் உத்தரவு பெற்றுக்கொள்வதற்கும் அளிக்கப்பட்டன.

அசோகன் அனேக புத்த ஸ்தலங்களுக்கு யாத்திரைபோய் அந்தணர்களுக்கும் சந்நியாசிகளுக்கும் தானதருமங்கள் செய்து பெரியோர்களைப் பேணி இராஜ்யத்தை அடிக்கடி சுற்றிவந்தான். அனேக தங்க

மோஹராக்களை ஏழைகளுக்கு இனமாக அளித்தான். மதவிடயங்களைப் பற்றிக் கற்றறிந்தோருடன் சம்பாஷித்துத் தெரிந்துகொள்வான். கௌதமபுத்தர் பிறந்த இடமாகிய லம்பினி தோட்டத்திற்குச் சென்று வணங்கி அங்கு ஒரு பெரிய கல்வெட்டு சாஸனத்தை எழுதி வைத்தான். அதில் தனது ஸ்தலயாத்திரையைப் பற்றியும் புத்தர் பிறந்த இடத்தைத் தரிசனம் செய்ததைப் பற்றியும் குறிப்பிட்டான். அசோகனது துணிபு என்னவெனில் ஒவ்வொருவரும் அவரவரது முயற்சியினாலேயே தம்மைப் பாபத்தினின்று விடுதலை செய்து கொள்ள வேண்டுமென்பதும், தமது புண்ணிய கருமங்களாலேயே பின்னால் ஸ்வர்க்க பதவியடைய முயல வேண்டுமென்பதுவுமேயாம்.

அசோகன், புத்தமதத்தைத் தழுவினாலும் பிறமதஸ்தர்களை அவரவர்களது இஷ்டப்படி அனுசரிக்க அனுமதி கொடுத்தான். பிறமதஸ்தர்களை அவன் துன்புறுத்தவில்லை. புத்த மடங்களுக்கும் கோயில்களுக்கும் ஏராளமாகத் திரவியம் கொடுத்தான். அந்தணர்களுக்கும் ஆஜீவக சந்நியாசிகளுக்கும் பணம் கொடுத்தான். ஜைனர்களையும் ஆதரித்தான. ஆனால் அசோகனுக்கு அதிகமாக அந்தணர்களைக் கண்டால் பிடிப்பதில்லை. ஏனெனில், அவர்கள் தாங்கள் உயர்ந்த ஜாதியர்களென்றும் இப்பூவுலகில் கடவுளுக்குச் சமானமானவர்களென்றும் அகம்பாவம் பிடித்தவர்களாக இருந்தார்கள். ஆதலால் அடிக்கடி அவர்களது அகந்தையை அடக்கி வந்தான். அதனாலேயே பிராமணர்கள், அக்காலத்து எழுதிய புத்தகங்களில் அசோகனைப் பற்றி அதிகமாகப் புகழ்ந்து எழுதவில்லை. புத்தர்களே

அவனை மிகவும் கொண்டாடினார்கள், அசோகனது முழுப்பெயர் புராணத்தில் அசோக வர்த்தனன் என்றும், சாஸனங்களில் பியதாசி அதாவது பிரியதாஸன் (பக்ஷமுள்ளவன்) என்றும் எழுதப்பட்டுள்ளது.

வருஷா வருஷம் தான் பட்டத்திற்கு வந்த தினத்தைக் கொண்டாடுவது அவன் வழக்கம். அப்பொழுது குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

அசோகன் அனேக புத்த குருமார்களை இந்தியாவிற்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்பி அனேகரைப் புத்தமதத்தைத் தழுவச் செய்தான். தெற்கேயும், சிங்களத்திற்கும் தன் தம்பி மஹேந்திரனையும் தங்கை சங்கமித்திரையையும் அனுப்பினான்.

## அசோகனது அரசாட்சி

அசோகனது இராஜ்யம் வடக்கே இமய மலையிலிருந்து தெற்கே பெண்ணாறு வரையிலும், மேற்கே அரபிக்கடலிலிருந்து கிழக்கே வங்காள விரிகுடா வரையிலும் பரவியிருந்தது. தேயமுழுதும் சுமார் 130 கல்வெட்டு சாஸனங்கள் எழுதி வைத்தான். அரசனது விருப்பமும் எண்ணமுமே சட்டமாக இருந்தன. தனது விருப்பத்தை மாகாண அதிபதிகள் மூலம் உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவித்தான். அரசனது பிள்ளைகளும் அல்லது அவனது பந்துக்களுமே மாகாணங்களை ஆள அனுப்பப் பட்டார்கள். பஞ்சாபில் தக்ஷசீலத்திலும், மத்திய இந்தியாவில் உஜ்ஜயினியிலும், கலிங்க தேயத்தில் தோசாலியிலும், தக்ஷிணத்தில் ஸ்வர்ணகிரி அல்லது பொன்மலையிலும் மாகாண அதிபதிகள் ஏற்படுத்தப் பட்டார்கள். அரசனுக் கடுத்தாற் போல் மாகாண அதிகாரிகளும், அவர்களுக்குக் கீழ்

ஜில்லா அதிகாரிகளும் இருந்தார்கள். ஜில்லா அதிகாரிகளுக்குப் பிரதேசிகர்கள் என்னும் பெயரும் உண்டு. திருட்டு, கொலை முதலிய வழக்குகள் விசாரிப்பவர்களுக்கு மகாமந்திர ரென்றும், மதவிஷயங்களைக் கவனிக்கும் அதிகாரிகளுக்குத் தர்ம மகாமத்திரர் என்றும் பெயர். அக்காலத்தும் இரகஸிய போலீஸார் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு மாகாணத்திலுள்ள அதிகாரிகளையும் அவர்கள் கவனித்து, அவர்களைப் பற்றி அரசனுக்கு எழுதுவது வழக்கம் அதிகாரிகள் ஏதாவது சதியாலோசனை அல்லது ராஜத்துரோகம் முதலியவையைச் செய்தால் இரகஸிய போலீஸார் அவைகளைப் பற்றி அரசனுக்குத் தெரிவித்து அவர்களைத் தண்டிப்பது வழக்கம்.

அசோகன் குற்றங்களை விசாரிப்பதிலும், நியாயம் தீர்ப்பதிலும் மிகவும் சுறுசுறுப்பாகவும் பக்ஷபாதமில்லாமலும் நடந்தான். எவ்விடத்தும் எக்காலத்தும் ஜனங்களுடைய கஷ்டங்களைக் கேட்டு அவைகளை நீக்கச் சித்தமாயிருந்தான்; பகல் இரவு என்றும் அவன் பார்ப்பது கிடையாது. தேகசிரமத்தையும் பாராட்டுவதில்லை; தான் அப்படி நடந்து கொண்டால்தான், தன் இராஜ்யத்தில் உள்ள உத்தியோகஸ்தர்களும் ஜனங்களும் அப்படியே நடப்பார்களென்பது அவன் துணிபு. "மன்னனெப்படி, மன்னுயிரப்படி" அல்லவா!

இராஜ்யத்தில் எப்பொழுதும் ஒரு பெரிய சேனை இருந்தது. ஆறுலட்சம் காலாட்படையும், முப்பதாயிரம் குதிரைப்படையும், ஒன்பதாயிரம் யானைகளும் ரதங்களும் இருந்தன. இவைகளைக் கவனிப்பதற்கு அனேக உத்தியோகஸ்தர்கள் இருந்தனர்.

அனேக கால்வாய்களை வெட்டவும் பாலங்கள் கட்டவும் திரவியம் வெகுவாய்ச் செலவழித்தான். வரி வசூல் செய்ய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டார்கள். தானியங்களது விளைச்சலில் நான்கில் ஒரு பாகம் தீர்வை வாங்கினான். ரஸ்தாக்களைப் பார் வையிடத் தனியாக உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப் பட்டார்கள். மைல்களைக் குறிப்பதற்காகக் கற்கள் நட்டு வைக்கப்பட்டன.

அசோகன் பாடலிபுத்ரத்தைத் தலைநகராக ஏற் படுத்திக்கொண்டான். அது ஸோன் நதியும் கங்கா நதியும் கூடும் இடத்தில் இருந்தது. அந்நகரில் அனேகம் பெரிய கட்டடங்களும், மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் கட்டப்பட் டிருந்தன. அந் நகரில் அறுபத்து நான்கு வாயிற்படிகளும் எண்ணூற்று எழு பது கோபுரங்களும் ஸ்தூபிகளும் இருந்தன. கைத் தொழில்களைப் பார்வையிட்டு விருத்தி செய்வதற்கும், அயல் நாட்டார்களைக் கவனிப்பதற்கும் ஜனனமரண ஜாப்தா வைத்துக்கொள்ளுவதற்கும், வியாபாரத்தைக் கவனிப்பதற்கும், அளவு, எடை முதலியவைகளைப் பார்வையிடுவதற்கும், விற்பனையான சாமான்களில் பத்தில் ஒரு பாகம் அரசாங்கத்தார் பெறுவதற்கும் கச்சேரிகளும் உத்தியோகஸ்தர்களும் ஏற்படுத்தப் பட்டனர்.

அசோகன் காலத்துக்கு முன் வரி கொடுக்கத் தவறினாலும், அரசன் செல்லும்பொழுது குறுக்கே நின்றாலும் மரணதண்டனை விதிக்கப்பட்டுக் கொண் டிருந்தது. பொய்சாக்ஷி சொன்னவர்களின் கை, கால் முதலிய அவயவங்களை நறுக்கிவிடுவது வழக்கம். ஆனால் அசோகன் அவைகளை மாற்றினான்.

அசோகனது சாஸனங்கள் அவனுடைய அனேக நற்செய்கைகளைப் பற்றியே தெரிவிக்கின்றன. அதாவது மிருகவதை கூடாதென்றும், மனிதர்களும் மிருகங்களும் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்றும், அடிமைகளையும் வேலையாட்களையும் அன்புடன் நடத்த வேண்டுமென்றும், தாய் தகப்பனுக்கு மரியாதைசெய்ய வேண்டுமென்றும், சந்நியாசிகளுக்கும் அந்தணர்களுக்கும் தானதருமங்கள் செய்யவேண்டுமென்றும், பிற மதங்களிடம் வெறுப்புக் கூடாதென்றும், ஆசாரமாயும் சுத்தமாயும் இருத்தல் வேண்டுமென்றுமே எழுதப் பட்டிருக்கின்றன.

அசோகனுக்குப் பிறகு அவனைப் போன்ற அவ்வளவு சிறந்த அரசன் இல்லாததால் இராஜ்யம் மிகவும் க்ஷீணதசையை அடைந்தது.

## 2. ஹர்ஷ வர்த்தனன்

ஹர்ஷ வர்த்தனன் கி. பி. 606-ல் சிங்காதனமேறி கி. பி. 647-ம் ஆண்டு வரையில் செங்கோல் செலுத்தி வந்தான். ஆயினும் முதல் பத்து வருடங்கள் அவன் அயல் தேயத்தாருடன் விடாமல் போர்செய்ய நேரிட்டது. அதன பிறகே அசோகனைப்போல் அவன அரிய நற்செய்கைகளைச் செய்தான். ஹர்ஷன் பிறர் நாட்டைக் கைக்கொள்ள சமர் செய்ததாக நாம் நினைத்தல் கூடாது. ஏனெனில் அப்பொழுது இந்தியா இருந்த நிலைமையும, பக்க தேயங்களிலிருந்த துஷ்ட அரசர்களுமே அவன் அப்படி போருக்கு எழுதற்குக் காரணமாய் இருந்தன.

குப்தர்களது இராஜ்யம் சீர் குலைந்து போனதற்குப் பிற்பாடு, வட இந்தியாவில் அனேக சிற்றரசர்கள் கிளம்பி, அவரவர்கள் சுயேச்சையாய் தமது இஷ்டப் பிரகாரம் அரசாட்சி செய்து கொண்டு வந்தார்கள். இந் நிலைமை மிகவும் அபாயகரமாக இருந்தது. ஏனெனில் ஒருவர்க்கொருவர் பொறாமையாலும் அசூயையாலும் சண்டை போட்டுக்கொண்டு தேயத்தின் அமைதியையே கெடுத்து விட்டார்கள். ஆதலால் இந்தியாவின் நலத்திற்குத் தனிச் செங்கோல் செலுத்தும் ஒரு சக்கரவர்த்தியின் ஆட்சி அவசியமாக இருந்தது.

ஹர்ஷனது தகப்பன் பிரபாகரன் தனேசுவரத்தில் அரசாட்சி செய்து வந்தான். அவன் மிக்க பலவானாதலால், தான் சக்கரவர்த்தி யாகவேண்டுமென்று அரும்பாடு பட்டான். அக்காலத்தில் ஹூணர்களென்ற ஒரு ஜாதியர்கள் இந்தியாவின் மேல் அடிக்கடி படையெடுத்து வந்தனர். ஆனால் பிரபாகரன் அவர்களைத் தோற்கடித்து பிரதாபசீலன் என்னும் பெயர் பூண்டான். கொஞ்சநாட்களுக் கெல்லாம் அவன் வியாதியால் பீடிக்கப்பட்டுப் படுக்கையோடு கிடந்தான்; அப்பொழுது ஹூணர்கள் மறுபடியும் படையெடுக்க, பிரபாகரன் தனது மூத்த குமாரனை இராஜ்யவர்த்தனனை அவர்களைத் துரத்த அனுப்பினான். அவனுடன் பிரபாகரன் தன் இளைய குமாரனை ஹர்ஷனையும் அனுப்பினான். இருவருமாக ஹூணர்களை முறியடித்துத் துரத்தினார்கள். மூத்தோன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான். இளையோன் பின் தங்கி காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது பிரபாகரன் உயிர் நீத்த சமாசாரம் ஒரு

ஒற்றன் மூலமாக அறிந்து, ஹர்ஷன் தனேசுவரத்திற்கு ஓடோடிச் சென்றான். அவனது துக்கத்திற்கு அளவில்லை. பிரபாகரன் தர்மபத்தினியாகிய இராணி யசோவதி தன்புருஷனுடன் உடன்கட்டை யேறினாள். ஹர்ஷன் எவ்வளவோ அவளைத் தடுத்தும் அப்பதிவிரதாசிரோமணி உடன்படவில்லை.

தமையன் வருமளவும் இராஜ்யபாரத்தைத் தாங்கி ஹர்ஷன் செவ்வனே ஆட்சி செலுத்தி வந்தான். கொஞ்ச காலத்திற்கெல்லாம் இராஜ்யவர்த்தனன் வெற்றிமுரசு அடிக்க அரண்மனை திரும்பினான். சகோதரர்கள் இருவரும் சந்தித்துப் பெற்றோர் மரித்ததைப் பற்றித் துக்கித்து, பிறகு அனேக விடயங்களைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். சிவபூஜையில் கரடியை விட்டதுபோல் அச்சமயம் தேகம் முழுதும் வியர்வை சொட்டப் பெருமூச்சுடன் ஓர் ஒற்றன் அவர்கள் முன் வணங்கி "ஐயகோ! நான் கொண்டு வந்த சமாசாரத்தைச் சொல்ல என் நாவெழவில்லை. தங்கள் தங்கை இராஜ்யஸ்ரீயின் கணவன்கிரஹவர்மனை மாளவ தேயத்தரசன் கொன்று, கானோஜ் இராஜ்யத்தையும் கைப்பற்றிக்கொண்டு இராஜ்யஸ்ரீ தேவியையும் சிறைவைத்திருக்கிறான்" என மொழிந்தான்.

இராஜ்யவர்த்தனன் கண்கள் தீப்பொறி வீச மீசை துடிக்க உடனே ஒரு சேனையுடன் அத்துஷ்டனைக் கண்டிக்கப் புறப்பட்டான். ஹர்ஷனை அரசு செலுத்தத் தனேசுவரத்தில் தங்க ஆக்ஞாபித்தான். இராஜ்யவர்த்தனன் சென்று மாளவதேயத் தரசனை வென்று திரும்பும்பொழுது வங்காளதேயத்தரசன் சசாங்கன் மிக்க வணக்கத்துடனும் அன்புடனும்

அவனை வரவழைத்து நயவஞ்சகமாகக் கொன்றுவிட்டான். இதற்குள் இராஜ்யஸ்ரீ சிறையினின்று தப்பி விந்தியமலைச் சாரலுக்கு ஓடிவிட்டாள். இவ்விரு சமாசாரங்களும் ஹர்ஷனுக் கெட்டவே, அவன் கோபத் தீயில் மூழ்கி உடனே ஒரு பெரிய சேனையைத் தயாரித்துத் தனது பந்துவாகிய பந்தியின் தலைமையின் கீழ்ச் சசாங்கனைத் தண்டிக்க அனுப்பினன். பின்பு விந்திய மலைச்சாரல்சென்று, சிலகாட்டு மனிதர்கள் மூலமாகவும், புத்த சந்நியாசி திவாகரமித்திரரது ஒத்தாசையாலும் இராஜ்யஸ்ரீ நெருப்பில் விழும் சமயத்தில் சென்று அவளைத் தடுத்து மீட்டு, அவளையும் அழைத்துக்கொண்டு தனேஸ்வரம் வந்து சேர்ந்தனன்.

ஹர்ஷனது தளகர்த்தனான சிம்ஹானந்தன், ஹர்ஷனை நோக்கி, அனேக சிற்றரசர்கள் அரசு செய்வதால் தான் இராஜ்யவர்த்தனனும் கிரஹவர்மனும் கொலையுண்டனரென்றும், அவர்களெல்லோரையும் அடக்கி ஹர்ஷன், தனது ஒரு குடைகீழ் கொண்டுவரவேண்டுமென்றும் சொன்னன். ஹர்ஷனும் தனது தளகர்த்தன் சொல்வது உண்மையே என்று தீர்மானித்து திக்குவிஜயம் செய்ய வாரம்பித்தான். எட்டுத் திக்குகளையும், பூமண்டல முழுதும் தான் ஜெயிக்கப் போவதாக முரசம் அடிக்கச்செய்து, 5000 யானைகளுடனும், 20,000 குதிரைப் படைகளுடனும் 50,000 காலாட் படைகளுடனும் ஹர்ஷன் கீழ்திசை நோக்கிச் சென்று பஞ்சாப், கானோஜ், வங்காளம், மிதிலை, ஒரிஸ்ஸா முதலிய பிரதேசங்களை ஜெயித்தான். அஸ்ஸாம் தேயத்தரசன் ஹர்ஷனது பிரதாபத்தைக் கண்ணுற்றும் கேட்டும் அவனை முடியால் வணங்கினன். மேற்கே மாள

வர், கூர்ஜ்ஜரம் முதலிய நாட்டைக் கைக்கொண்டு தெற்கே செல்லும்பொழுது சாளுக்கிய மன்னன் புலகேசியால் தோல்வியடைந்து தனேஸ்வரம் திரும்பினான். ஹர்ஷன் மறுமுறை படையெடுக்கவில்லை. ஏனெனில் தான் ஜெயித்ததை ஒழுங்குபடுத்தினால் போதுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று.

ஹர்ஷன் போர்க்களத்தில் நிகரற்றவனாய் விளங்கினதுபோல் செங்கோல் செலுத்துவதிலும் நிகரற்றவன். தன் நாட்டில் ஓரிடத்திலும் கலகம் உண்டாகாமலிருப்பதற்காக அவன் தன் சேனையை அதிகரித்து அநேக இடங்களில் ஸ்தாபித்தான். பலபல மிகவும் சிறந்த யானைகளையும் குதிரைகளையும் அனேக இடங்களிலிருந்து சேகரித்தான். அவனிடம் அராபி, பாரசீகம், ஸிந்து முதலிய பிரதேசங்களிலிருந்து வந்த குதிரைகள் இருந்தன. அவனது சேனையில் ஒட்டகங்களும் இருந்தன. மொத்தம் ஹர்ஷனிடம் 60,000 யானைகளும், 100,000 குதிரைகளும இருந்தன. இவ்வளவு பெரிய சேனையை வைத்துக்கொண்டிருந்ததனால் அவன் ஆண்ட முப்பது வருஷங்களிலும் ஒரு சிறு கலகமும் நடக்கவில்லை.

ஹர்ஷன், திக்குவிஜயத்தை முடித்தவுடன், புத்த மதத்தின் கொள்கைகள் அவன் மனத்திற்கு மிகவும பிடித்திருந்தமையால், அவனது மூதாதைகள சிவனையும் சூரியனையும் தொழுதாலும் அவன் மஹாயான புத்த மதத்தைத் தழுவினான். புத்த மதம் பரவுவதற்காகக் காஞோஜில் ஒரு பெரிய சபை கூட்டினான். அங்குச் சீனாவிலிருந்து வந்திருந்த ஹியூன்ஸியாங்கு என்பவர் புத்த மதத்தைக் கொண்டாடி மிகவும்

விரிவாகப் பேசினார். அச்சபைக்கு அஸ்ஸாம் தேயத் தரசனும், மற்றும் அனேக அரசர்களும், கற்றோர்களும் வந்திருந்தார்கள். அது ஒரு தெய்வ உலகம் போல் காணப்பட்டது. இதைத் தவிர வருஷத்திற் கொருதடவை புத்தசந்நியாசிகளை வரவழைத்து இருப் பத்தோரு நாட்கள் சாப்பாடு முதலியவை போட்டு மிகவும் உபசாரம் செய்தான். கற்றறிந்தோருக்குச் சம்மானஞ் செய்து, அறிவிலிகளை இராஜ்யத்திலிருந்து துரத்தினான். புத்த மடங்கள் அனேகங் கட்டினான். புத்த சந்நியாசிகள் தங்க அனேகம் தோப்புத் துரவுகள் ஏற்படுத்தினான். புலால் தின்னக்கூடாது என்றும், ஒரு மிருகத்தையும் கொல்லக்கூடாது என்றும் தன் இராஜ்யம் முழுதும் கண்டிப்பாய் உத்தரவிட்டான். அவன் நாளில் காஞ்ஜ் புத்த மதத்திற்கு ஒரு முக்கிய உறைவிடமாயிருந்தது. ஹர்ஷன் ஆட்சிக்கு முன் புத்தமடங்கள் இரண்டே இருந்தன. ஆனால் ஹர்ஷன் நாளிலோ 100 மடங்கள் இருந்தன.

ஹர்ஷன் புத்த மதத்தைத் தழுவினாலும் பிற மதங்களைத் தூஷிக்கவோ அல்லது வெறுக்கவோ வில்லை. அந்தணர் முதலியோருக்குத் தானங்கள் செய்தான். ஐந்து வருடங்களுக் கொருமுறை பிரயாகில் (Gaya) ஒரு பெரிய சபையைக் கூட்டினான். அதற்கு, யூதர்கள், அந்தணர்கள் முதலிய எல்லோருமாக ஐந்து லக்ஷம் ஜனங்கள் வருவதுண்டு. அவர்களுக்கு, நகைகளும், தங்க மோகராக்களும், வெள்ளி நாணயங்களும் துணிகளும் அவரவர்களுக்குத் தக்கபடி தானம் செய்வான். அப்பொழுது ஒரு பழந்துணியைத் தனது தாழ்மை ஸ்திதியை உணர்த்தக் கட்டியிருப்பான்.

ஹர்ஷன் ஒரு கற்றறிஞன். “கற்றாரைக் கற்றாரே காமுறுவர்” என்றபடி அவனது சபையை அனேக வித்துவான்கள் அடைந்தார்கள். அவனும் அனேக புலவரை ஆதரித்தான். அவனுடைய சபையில், அவனது சரித்திரத்தை எழுதிய பாணகவி இருந்தார். அவர் ஹர்ஷ சரித்திரம், காதம்பரி முதலியவைகளை எழுதினார். மற்றும் அச்சபையில் ஹரிதத்தன், ஜயசேனன் முதலிய கல்விமான்கள் இருந்தனர். சீன தேயத்து அறிஞன் ஹியூன்ஸியாங்கு ஹர்ஷன் காலத்தில் இந்தியாவிற்கு வந்து அவன் சபையில் வெகுநாள் தங்கினான். அவன் ஹர்ஷனைப் பற்றிப் புகழ்ந்தும் அவனது இராஜ்யத்தைப் பற்றி விரிவாயும் எழுதியிருக்கிறான். ஹர்ஷனும், நாகானந்தன், ரத்னாவளி, பிரியதர்சிகா முதலிய நாடகங்கள் இயற்றினான். ஹர்ஷன் காலத்தில் கல்வி மிகவும் விருத்தியடைந்திருந்தது.

ஹர்ஷனது அரசாட்சி மிகவும் சிறந்ததாக இருந்தது. அவன், தன் இராஜ்யம் முழுதும் அடிக்கடி சுற்றி வந்ததால் தேயத்தையும் ஜனங்களையும் நன்கு அறிந்திருந்தான். அவனுடைய இராஜ்யம் வடக்கே காஷ்மீரதிலிருந்து விந்தியமலை வரையிலும், மேற்கே குஜராத்திலிருந்து கிழக்கே ஒரிஸ்ஸா வரையிலும் பரவியிருந்தது.

ஹர்ஷன் சோம்பலில்லாமல் நாள் முழுதும் இராஜாங்க விஷயத்திலேயே கவனத்தைச் செலவழித்து வந்தான். அவனிடம் கடவுள் பக்தி வெகுவாய் இருந்தது. சிவாஜியின் அஷ்டப்பிரதான் போல ஹர்ஷனும் தனது அரசுபுரிய அனேக மந்திரிகளை ஒத்தாசைக்கு

நியமித்திருந்தான். தற்காலத்தில் ஆங்கிலேய அரசாட்சியில் எப்படி நடக்கிறதோ அவ்வாறே அக்காலத்திலும் ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வொரு இலாகாவை நடத்தி வந்தார். அவர்களுக்கு வெகுமானம் ஜாகீராகவோ, தானியமாகவோ கொடுக்கப்பட்டது.

குற்றங்கள் அதிகமாக இல்லை. குற்றம் செய்தவர்கள் வெகு கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். இராஜத் துரோகம் செய்யும் குற்றவாளிகளுக்கு ஆயுள் முடியும்வரை ஜெயிலில் இருக்கும்படி தண்டனை விதிக்கப்பட்டது. துர்நடத்தை முதலியவைகளுக்குத் தீவாந்தர சிக்ஷையாவது, கை முதலிய அவயவங்களை நறுக்குவதாவது, வழக்கமாயிருந்தது. குற்றங்களின் உண்மையை வெளிப்படுத்த, குற்றவாளிகளைத் தண்ணீரிலோ, நெருப்பிலோ வீழ்த்தி வருத்தினார்கள்.

ஹர்ஷன் சாலைகளில் தண்ணீர்ப்பந்தல்களை வைத்தான். அனேக வைத்திய சாலைகள் கட்டுவித்தான். அனேக தங்குமிடங்களும் சத்திரங்களும் கட்டினான். அங்கும் மருத்துவர்களை ஏற்படுத்தி, வரும் நோயாளிகளைக் கவனிக்கச் செய்தான். இந்த ஏற்பாடு இக்காலத்தும் இல்லை. எனவே ஹர்ஷனது ஏற்பாடு சாலவும் புகழத்தக்கதே.

ஆறிலொரு கடமை தீர்வை வாங்கப்பட்டது. இராஜாங்க விஷயங்களை எழுத லிகிதர்கள் ஏற்படுத்தப் பட்டார்கள். ஞானியர்களும் உலகப்பற்றற்ற சந்நியாசிகளும் நாடெங்கும் பொலிந்து கிடந்தனர். ஹர்ஷன் ஆட்சியின் இறுதியிலேயே புத்தமதம் க்ஷீணிக்கத்தொடங்கிற்று. ஏனெனில் புத்த சமயத்தோரது ஒற்றுமை குலைந்து இருபிளவுகளுக்குப் பதிலாக பதி

னெண்வகைகள் உண்டாயின. அப்படியிருந்தாலும் ஹர்ஷன் அனேக மடங்கள் கட்டினான். ஒவ்வொன்றிலும் அனேக மாணவர்கள் போதிக்கப்பட்டனர். அவற்றுள் மிகப்பெரிதும், கீர்த்திபெற்றதும் நாளந்த மடம் என்பதே. அங்கு 10,000 மாணவர்கள் கல்வி கற்று வந்தார்கள்.

ஹர்ஷன் கானோஜைத் தன் தலைநகராக்கிக் கொண்டான். அது அப்பொழுது பாடலிபுத்ரத்தைக் காட்டிலும் சிறந்ததாக விளங்கிற்று. ஐந்து மைல்கள் விஸ்தீரணத்துடன், அனேக உயர்ந்த மாளிகைகளும், கூடகோபுரங்களும் துலங்க, உயர்ந்த நாகரீகமும் கல்வி வளர்ச்சியும் உள்ள ஜனங்களுடன் அந்நகர் ஸ்வர்க்கம்போல விளங்கிற்று. அந்நகரில் தனித் தனியே இராஜ வீதியும், அந்தணர் வீதியும், க்ஷத்திரிய வீதியும், வைசிய வீதியும், கணிகையர் வீதியும், பெரிய கடைவீதியும் இருந்தன. வீடுகள் சுண்ணாம்பு அடிக்கப்பட்டும், சுவர்கள் அனேக சித்திரவேலைகள் தீட்டப் பட்டும் விளங்கின. அரண்மனைக் கருகில் எல்லாவித மிருகங்களும் உள்ள மிருகக் கண்காட்சி சாலை ஒன்று இருந்தது. அரசன் விலையுயர்ந்த பட்டு வஸ்திரங்களும் பொன்னாபரணங்களும், இரத்தினாபரணங்களும் அணிந்து விளங்கினான்.

நகரைச் சுற்றிப் பெரிய மதில்கள் இருந்தன. நான்கு வருணத்தாரும் அவரவர்கள் தொழிலைச் செய்து வந்தனர். ஹர்ஷனுடைய சகோதரி இராஜ்யஸ்ரீ கல்வி கற்றவள்; அவள் அடிக்கடி வெளியிற் சென்று நோயாளிகளுக்கும், மற்றும் ஏதோ கஷ்டங்கள் உள்ளவர்களுக்கும் ஒத்தாசை செய்து

வந்தாள். இதனால், அக்காலத்தில் பெரிய மனிதர்கள் வீட்டு ஸ்திரீகள் கல்வி கற்றார்களென்றும், கோஷா முறையை அனுசரிக்க வில்லை யென்றும் தெரிகிறது. யசோவதி மகாராணி சககமனம் செய்ததனால், அக் காலத்தில் உடன்கட்டை யேறும் வழக்கம் இருந்த தென்று விளங்குகிறது.

கப்பல் போக்கு வரத்து ஹர்ஷன் காலத்தில் நடந்து வந்தது. அயல் நாடுகளுடன் வியாபாரம் வெகு வாய் நடந்து வந்தது. சீனுவுக்கு ஒரு தூதனைக் கப்ப லில் அனுப்பியதாகச் சில ஆதாரங்களால் தெரிகிறது. சோம்பலென்பதே இல்லாமல் மழைக்காலம் தவிர, பாக்கி நாட்களெல்லாம் ராஜ்ய காரியங்களையும், தேச நன்மைக்கு வேண்டிய காரியங்களையும் ஹர்ஷன் சோம் பலில்லாமல் செய்துவந்தான். ஜனங்களுடைய க்ஷேமத் தைக் கருதியே ஒவ்வொரு காரியமும் செய்தான்.

கி. பி. 655-ல் ஹர்ஷன் இறந்ததாகத் தெரிகிறது. சிலர் அவன் இறந்த வருடம் 646 அல்லது 647 என் கிறார்கள். எப்படியாயினுஞ் சரி, அவன் இறந்த பிற் பாடு அவனைப்போல் திறமையுடன் ஆள அரசர் இல் லாமையாலும் மந்திரி இராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டமையாலும், நாடு மிக்க குழப்பத்துடன் சீர் குலைந்து இருந்தது. இறுதியில் சீனதேசத்தார் படை யெடுத்து வந்து, அம்மந்திரியைத் துரத்திக் கொஞ்சம் அமைதியை உண்டு பண்ணினார்கள்.

## 3. இராஜஇராஜ சோழன்

இராஜஇராஜ சோழன், தென்னிந்தியாவில் சோழ மண்டலத்தை ஆண்டுவந்த சோழ வம்சத்தில் தோன்றி 10-வது நூற்றாண்டின் இறுதியிலும் 11-வது நூற்றாண்டின் முதலிலும் அரசாண்டான். தென்னிந்தியாவில் தமிழ் மக்கள் வெகு காலத்திற்கு முன்பே உயர்ந்த நாகரீகத்துடன் குடிகொண்டிருந்தனரென்பது அநேக ஆதாரங்களால் தெரிய வருகிறது. தமிழ் நாட்டை ஆண்டுவந்தவர் மூவேந்தர்கள். அவர்கள் முறையே சேர சோழ பாண்டியர் எனப்படுவர். அவர்களுடைய நாடுகளில் சோழ நாடு மிகவும் பெயர் பெற்றது; வளம் பொருந்தியது. இதை ஔவை சுருக்கமாக "சோழவளநாடு சோறுடைத்து" என்று விளக்கிக் காட்டியிருக்கிறார். சோழநாட்டின் எல்லையைக் கம்பர் பின்வருமாறு கூறியுள்ளார்.

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

அதாவது கிழக்கே வங்காளக் குடாக்கடலிலிருந்து, தெற்கே வெள்ளாறு வரையிலும் அதாவது பாண்டி நாட்டு எல்லை வரையிலும், மேற்கே கோட்டகிரி அல்லது சேரநாடு வரையிலும், வடக்கே பெண்ணையாறு அதாவது திருப்பதி க்ஷேத்திரம் வரையிலும் சோழ நாடு பரவி யிருந்தது என்ப.

இராஜ இராஜ சோழனுக்கு முன் அனேக சோழ அரசர்கள் இருந்தார்கள். அவர்களில் இராஜ இராஜனுக்குச் சமமாக சோழ வம்சத்தில் முதன் முதல்

ஆண்ட மனுநீதிகண்ட சோழனையும், பிறகு கி. பி. முதல் நூற்றாண்டில் ஆண்ட கரிகாலனையுமே சொல்லலாம். இராஜ இராஜன், இரண்டாவது பராந்தகனான சுந்தரச் சோழனது இளைய குமரன். அவன் தனது தமையன் ஆதித்தனுக்குப் பிறகு கி. பி. 985-ல் சிங்காதனமேறி கி. பி. 1013 வரையில் அரசாண்டான். அவன் சிங்காதனமேறிய நாளைப் பலர் பலவாறாகச் சொல்லினும், அநேகர் கி. பி. 985 என்றே கொண்டிருக்கிறார்கள்.

இராஜஇராஜன் இளமைப்பருவம் முதலே வெகு சுறுசுறுப்பாகவும் நல்ல உழைப்பாளியாகவுமிருந்தான். கல்வியிலும் சரி, வில் வித்தை, வாள் வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம் முதலியவையிலும் சரி, அவனுக்கு நிகருள்ளவர் எவரும் இல்லை. அரசனாகிய சில மாதங்களுக் கெல்லாம் திக்கு விஜயத்திற்கு ஆரம்பித்தான். முதலில் காஞ்சியைத் தலைநகரா யுடைய தொண்டை மண்டலத்தை ஆண்டுவந்த பல்லவராயனைப் போரில் வென்று தனக்குத் திறை கட்டுமாறு செய்து, பின்னர் இறுமாப்புக் கொண்ட சேரன்மீது படையெடுத்துச் சென்று அவனையும் போரில் வென்று திரும்பினான். பிறகு கங்கபாடி என்ற இப்போதைய மைசூர் இராஜ்யத்தையும் அவன் வென்றான். அதன் பின்பு வேங்கிநாடு, (கோதாவரி, கிருஷ்ணா ஜில்லா) கலகத்தால் சீர் குலைந்திருப்பது கண்டு, அதுவே தருணமென்று தன் மகன் இராஜேந்திரனை யங்கு அனுப்பினான். அவ் விளவரசன், வெங்கி நாட்டையாண்ட விமலாதித்யனைத் தோற்கடித்துச் சிறை கொண்டு, வெங்கி நாட்டைச் சோழ நாடுடன் சேர்த்துத் தஞ்சைக்குத் திரும்பினான். ஆனால் கொஞ்ச காலத்திற்கெல்லாம், விமலாதித்யனது குணத்தையும்,

அழகையும் கண்டு மெச்சி அவனுக்கு இராஜஇராஜன் தன் மகளை மணம் செய்வித்து அவனது இராஜ்யத்தையும் திருப்பிக் கொடுத்தான்.

பின்பு அவ்வேந்தன் கங்கபாடிக்குப் பக்கத்திலுள்ள நுளம்பபாடி என்னும் கோலாரையும் சுற்றுப் பிரதேசங்களையும் ஜெயித்தான். குடகு இராஜ்யத்தையும் வென்று தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான். போரில் மிக்க வீரச்செயல்களைப் புரியும் சூரர்களுக்குப் பட்டம் அளித்து, இறக்கும் தலைவர்களுக்குக் கற்சிலைகள் கட்டி வைத்தான். மற்றும் சில வெற்றி பெற்ற வீரர்களுக்கு ஜெயித்த நாட்டையாளும் பதவியை அளித்தான். இச்செய்கைகளால் வீரர்கள் அவனிடம் அன்பும் நன்றியும் பாராட்டி வந்தார்கள்.

சோழனது வெற்றியைக் கண்டு பொறாமை கொண்டு மற்ற இரு தமிழரசர்களாகிய சேர பாண்டிய மன்னர்கள் மிகப்பெரிய சேனையுடன் அவனை எதிர்த்தார்கள். ஆயினும் சோழன் அவர்களை வென்று அவர்களது பொன்னையும் மணியையும் கைப்பற்றிக் கொண்டான். பிறகு கொல்லத்தின்மேல் படையெடுத்து அதையும் தன் இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டான். அதன் பின் தற்காலத்து கஞ்சம், விசாகப்பட்டணம், ஒரிஸ்ஸாவாகிய கலிங்க நாட்டின் மேல் படையெடுத்து அதையும் ஜெயித்தான். எனவே கஞ்சம் முதல் கொல்லம் வரையில் சோழ இராஜ்யம், இராஜ இராஜன் காலத்தில், பரவியிருந்தது.

இராஜஇராஜன் சிங்காதன மேறிய இருபதாம் ஆண்டில் இலங்கை உள் நாட்டுக் கலகத்தாலும் சண்டையாலும் சீர் குலைவதைக் கண்டு, ஒரு கப்பற் படை

யுடன் சென்று இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டான். அங்கு அவன் ஒரு கோயிலுக்கு ஒரு கிராமத்தை மானியம் கொடுத்ததாகக் கல் வெட்டு சாஸனம் ஒன்று கூறுகின்றது. இராஜஇராஜனது போர்த்திறம் நாலா பக்கங்களும் பரவி விளங்கிற்று. பிறகு விந்திய மலைக்குத் தெற்கே மைசூர் வரையிலுமுள்ள பிரதேசங்களையும் அவன் ஜெயித்தான்.

இராஜஇராஜன் போருக்கெழும் பொழுது நல்ல தினம் பார்த்தே கிளம்புவது வழக்கம். அவன் தன் குலதெய்வத்தை வணங்கிவிட்டு அந்தணர் பெரியோர்களுக்குத் தானம் முதலியவை வழங்கிச் செல்வான். அவனது தெய்வ பக்தியும் பெரியோரிடமுள்ள மரியாதையும் சாலவும் புகழத்தக்கவை.

இராஜஇராஜனுக்கு அனேக பட்டப் பெயர்கள் உண்டு. அவைகளாவன: இராஜ இராஜ கேசரிவர்மன், அருள்மொழிவர்மன், தென்ன பராக்கிரமன், சிவபாத ஹிருதயன், ஜயங்கொண்ட சோழன், மும்முடிச் சோழன் முதலிய பலவாம். தமிழ் வேந்தர் மூவரில் சேர பாண்டியரை வென்று, இராஜஇராஜ சோழன் நிகரற்றவனாக விளங்கியதால் அவனுக்கு மும்முடிச் சோழன் என்றும் பெயர் விளங்கலாயிற்று.

அவன் சைவ மதத்தைச் சேர்ந்தவன். சிவ பிரானே அவனது குலதெய்வம். அவன் அனேக கோயில்களைக் கட்டினதன்றி, தஞ்சையில் ஸ்ரீபிரகதீஸ்வரர் கோயிலையும் கட்டினான். இதற்கு இராஜ இராஜேஸ்வரர் கோயில் என்ற பெயரும் உண்டு. இந்தியாவில் உள்ள கோயிற் கட்டடங்களுள் இது மிகச் சிறந்தது. அயல் நாட்டு யாத்திரிகள் முதலியோர் இக் கோயிலைப்

பார்க்காமற் செல்வதில்லை. வருடங்கள் பலவாயினும் இக் கோயில் ஒரு பழுதும் இல்லாமல் இருக்கின்றது. இக் கோயில் சுவர்களில் வெட்டப்பட்ட கல் வெட்டு சாஸனங்களிலிருந்தே இவ் வேந்தனுடைய சரித்திரம் அறியப் படுகிறது.

தவிர, வட ஆற்காடு ஜில்லாவில் மேற்பாடி என்னும் ஊரில் ஒரு சிவன் கோயிலையும், தஞ்சைக்கு வடக்கே 7-மைல்கள் தூரத்தி லிருக்கும் பஞ்சநத க்ஷேத்திரமாகிய திருவையாற்றில் ஒரு சிறந்த கோயிலையும் அவன் கட்டினான். இராஜ இராஜன் சிவ மதத்தனாக இருந்தாலும் மற்ற மதங்களிடம் வெறுப்புக் காண்பிக்கவில்லை. அவன் காலத்தில் சைவரும், வைணவரும், ஜைனரும் கலந்து வாழ்ந்து வந்தனர். இராஜ இராஜன் சில புத்த கோயில்களுக்கும் மானியம் கொடுத்தான்.

அந்தணர் முதலிய நான்கு ஜாதியர்களும் அவரவர்களுடைய தொழிலைச் செவ்வனே நடத்தி வந்தார்கள். சிவன் கோயிலில் தேவார திருவாசகமும், விஷ்ணு கோயிலில் திருவாய்மொழி, பிரபந்தங்களும் ஓதப்பட்டு வந்தன.

இராஜஇராஜன் காலத்தில் கல்வி மிகவும் மேம்பட்டிருந்தது. அனேக கல்விச் சங்கங்கள் ஏற்பட்டிருந்தன. திருவிசைப்பா இயற்றிய கந்தராதித்ய தேவரும், தேவார திருவாசகங்களை இயற்றிய நம்பியாண்டார் நம்பியும் இராஜஇராஜன் காலத்தவர். வைணவ ஆசாரியரான யாமுனாசாரியரும், நாதமுனிகளும் இவன் காலத்து வாழ்ந்து வந்தவரே யாவர். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா இம் மூன்றை

யும் முறைப்படி இராஜஇராஜன் ஓதி வந்தமையால், சிவனடியார்கள் இவ் வேந்தனுக்குத் திருமுறைகண்ட சோழன் எனக் காரணப் பெயரிட்டுள்ளார்.

இராஜ இராஜனது பத்தினிகளும் தெய்வ பக்தி யுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் அறுவ ரெனத் தெரிகிறது. அவர்கள் முறையே உலோக மகாதேவி, பிரீதிமகாதேவி, பஞ்சவன்மகாதேவி, அபி மானவல்லி, சோளமகாதேவி, கூத்தன்வீரானியர் எனப்படுவர். இவர்களில் கடைசியில் கூறப்பட்டவர் சேரனின் மகளாம். இவர்களில் உலோக மகாதேவியே பட்டமகிஷியாக இருந்தாள். பட்டமகிஷிக்குக் கோப் பெருந்தேவி எனப் பெயருமுண்டு. உலோகமகாதேவி கல்வி கற்றவள். புத்தியும் அழகும் ஒருங்கு அமையப் பெற்றவள். இராஜஇராஜனுக்கு, இராஜேந்திரன் என்ற ஒரு மகனும், குந்தவையார், மாதேவடிகள் என்ற இரு பெண்களும் பிறந்தனர்.

இராஜஇராஜன் தான் பிறந்த நாளிலும் மற்ற விசேட நாட்களிலும் தான் ஒரு துலாவில் ஏறி மற் றொன்றில் தன் நிறையளவு பொன்னை நிறுத்துத் தானம் செய்வான். இத்துலாபார வழக்கம் அந்நாளி லும், பின் மொகலாயர் காலத்தும் கையாளப்பட்டது.

இராஜ இராஜன் பூசையின்றி ஒருநாளும் இரான். பூசை செய்தே உணவு உண்பான். இராஜஇராஜன் தஞ்சை நகரைத் தனக்குத் தலைநகராக வைத்துக் கொண்டான். அது அப்பொழுது மாடமாளிகைகளு டனும் கூடகோபுரங்களுடனும் தேவேந்திர உலகம் போல் விளங்கிற்று. நகருக்கு வெளியே குளிர்ந்த பொழில்களும், பொய்கைகளும் வழிப்போக்கர் தங்கு

மிடமும் மடங்களும் இருந்தன. தஞ்சையின் கோட்டையைச் சுற்றி ஓர் ஆழமான அகழி இருந்தது. அதில் அநேக வித பெரிய மீன்களும் முதலைகளும் விடப்பட்டிருந்தன. அந்த அகழியைக் கடக்க நடுவே ஒரு பெரிய பலகை போடப்பட் டிருந்தது. இரவு 9 மணிக்கு அப்பலகையை எடுத்து விடுவார்கள். மறு நாள் காலை 7 மணிக்கே அப்பலகையைப் போட்டுக் கோட்டைக் கதவைத் திறப்பார்கள். ஆதலால் இரவில் ஒருவரும் வெளிப் போகவாவது உள் செல்ல வாவது முடியாது. மற்ற நேரங்களில் உருவின கத்தியுடன் போர் வீரர்கள் வாயிற்படிகளில் காவல் செய்து வந்தார்கள். எனவே பகைவர்கள் உட்செல்லப் பகலிலும் சரி இரவிலும் சரி, முடியாது. கோட்டை வாயிலைக் கடந்து உட்செல்லின், நடுவில் பெரிய அழகிய அரண்மனையும் அதைச்சுற்றி அந்தணர்வீதியும், அரசர் வீதியும், வணிகர் வீதியும், வேளாளர் வீதியும், கணிகையர் வீதியும் தனித்தனி அணியணியாக விளங்கும்.

இராஜஇராஜன் காலத்து அவன் நாட்டிலுள்ளோர் அவரவரது தொழிலைச் செய்துகொண்டு தருமநெறி தவறாமல் நடந்து வந்தார்கள். பெண்டிர்கள், தங்கள் தங்கள் கொழுநர்களைத் தொழுது ஸ்திரீ தர்மத்தை வழுவாது நடத்தி வந்தனர். சாதி வேற்றுமையும் சமய சச்சரவும் அந்நாளில் இல்லை. யாழ் முதலிய கருவிகள் அப்பொழுதும் இருந்தன. நாடகம், பாட்டு முதலியன நடந்து வந்தன. பெண்களுக்குச் சுதந்தரங்கள் பல இருந்தன. வர்த்தகர்கள் கப்பல்களில் கடலைத் தாண்டிப் பல துறைமுகங்களை அடைந்து வியாபாரம் செய்து வந்தார்கள். பொன்

னும் வெள்ளியுமே ஆபரணங்களுக்கு உபயோகப் படுத்தப்பட்டு வந்தன.

## இராஜஇராஜனது அரசியலின் மாட்சி

இராஜஇராஜன், குடிகளுக்குப் பல நன்மைகள் புரிந்தான். இவனது செங்கோலின் மேன்மை மற்ற நாடுகளிலுள்ள ஜனங்களைச் சோழநாடு வந்து குடியேறச் செய்தது. அவன் அனேக காடுகளை வெட்டி நகரங்கள் கட்டினன்; குளங்கள், கால்வாய்கள் வெட்டி நாட்டின் வளத்தை மிகைப்படுத்தினன். அவனது அந்தரங்க ஆலோசனைச் சபையில் அமைச்சர், புரோகிதர், சேனபதிகள், ஒற்றர் முதலியோர் இருந்தனர். சோழ இராஜ்யம் அவன் காலத்தில் விந்தியமலைக்குத் தெற்கே கன்யாகுமரி வரையில் பரவியிருந்ததால், அது அனேக மண்டலங்களாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மண்டலாதிபதி நியமிக்கப் பட்டான். அம் மண்டலாதிபதிகள் சரிவர ஆட்சி புரிகின்றார்களா வென்று கண்டு தெரிவிக்கச் சாரணர்களும், ஒற்றர்களும் ஏற்படுத்தப்பட்டனர். மற்றும் அரசன், தன் நகரின் செய்திகளை அறியும் பொருட்டு மாறு வேடம் புனைந்து நகர் சுற்றி வருவதுண்டு. இது அக் காலத்தில் ஒரு முக்கிய வழக்கமாக இருந்தது. ஜனங்களது குற்றங் குறைகளைக் கண்கூடாகப் பார்த்து அவைகளைத் தீர்ப்பதற்கு இதுவே சரியான வழியாதலால், இம் மார்க்கத்தைப் புராதன அரசர்கள் கையாண்டு வந்தார்கள். குடிகள் ஒருவித கஷ்டமுமின்றி அரசனைக் கொலுமண்டபத்தில் கண்டு தங்கள் தங்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ளுவது வழக்கம். ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒவ்வொரு அதிகாரி நியமிக்-

கப்பட்டிருந்தாலும், யாவருக்கும் மேல் சகல உரிமைக ளும் அதிகாரமும் அரசனுக்கே இருந்தன. சிறு கிரா மங்களை, கிராம பஞ்சாயத்துகள் பரிபாலித்து வந்தன.

செல்வர்க்கும் வறியார்க்கும் ஒரேவிதத் தீர்ப்பும் தண்டனையுமே அளிக்கப்பட்டு வந்தன. பசுவின் கன்றைக் கொன்ற தன் தனயனைத் தேர்க்காலடியில் கொல்லத் துணிந்த மனுநீதிகண்ட சோழன் வம்சத் தில் பிறந்தவ னல்லவா இராஜ இராஜன்! அவனிடம் பட்சபாதம் எப்படி இருக்கக் கூடும்? ஆதலால் அவனது நீதிஸ்தலங்கள் நீதியையே நடத்தி வந்தன. கிராம வழக்குகளைக் கிராம சபைகளே விசாரித்து வந்தன. நகரசோதனைக்காக அனேக காவலாளர்கள் இருந்தார்கள். இராஜஇராஜனிடம சுமார் இருபது லக்ஷம் போர் வீரர்கள் இருந்தார்கள். யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்கள் முதலியவை அவனது சேனையில் இருந்தன. வேல், வாள், ஈட்டி, சூலம், இருப்புலக்கை, கத்தி, கேடயம் இவைகளே யுத்தத்தில் ஆயுதங்களாக உபயோகப்பட்டன.

அவன் குடிகளிடம் ஆறிலொரு கடமையே வாங்கி வந்தான். வரிகள் அனேகமாகத் தானிய மாகவே வசூலிப்பது வழக்கம். மூன்று வருடகாலம் எவராவது அரசனுக்கு வரி கொடாமற் போனல் பின்பு அவரது நிலம் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்படும. சோழ நாட்டை, காவிரி, கொள்ளிட மும், அவைகளின் உபநதிகளான வீரசோழனறு, வெட்டாறு, வெள்ளாறு, வடவாறு முதலியவைளும் மிகவும் வளம் பெறச் செய்கின்றன. இங்ஙனம் நீர் நிலைகள் மிகவும் இருப்பதனுல்தான் இந்த நாட்டிற்குப்

புனல் நாடு என மற்றொரு பெயரும் உண்டு. இராஜ இராஜன் நாடுமுழுமையும் அனேக ரஸ்தாக்கள் போட்டான்; சாலை ஓரங்களில் நிழல்தருமரங்கள் வைத்தான். அந்தணர்கள் வேளாளர்கள் முதலான சகல ஜாதியரும் இவன் காலத்தில் மிகவும் சௌக்கியமாக இருந்தார்கள். இங்ஙனம், அரசர்களுக் கெல்லாம் அரசனுய்ச் செங்கோல் புரிந்து தமிழுலகத்தை இராஜ இராஜன் மேம்படச் செய்தான்.

## 4. சளுக்கிய விக்கிரமாதித்தன்

விக்கிரமாதித்தன், தக்ஷிணத்தின் மேல்பாகத்தை ஆண்டுவந்த சளுக்கிய வம்சத்தைச் சார்ந்தவன். இவனது தகப்பன் ஆகவமல்லன் என்று சொல்லப்படும் முதலாம் சோமேசுவரனேயாவன். சோமேசுவரன் கி. பி. 1042 லிருந்து கி. பி. 1068 வரையில் அரசுபுரிந்தான். கலியாணபுரம், அவன் காலத்தில் மிகவும் பிரபலமான நகராக இருந்தது. அதையே அவன் தலைநகராக வைத்துக் கொண்டான். அவன் அனேக இராஜ்யங்களை ஜெயித்தான். அவனிடம் வீரமும், தயையும், ஈகைக் குணமும் ஒருங்கே அமைந்திருந்தன. பொக்கிஷத்தில் ஏராளமாகப் பணம் இருந்தது. சோமேசுவரன் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்துவந்தானெனினும், மக்கட் பேறில்லாததால் அவன் சந்தோஷம் குன்றிக்கொண்டே வந்து அவன் மனதை மிகவும் வருத்திற்று. அதனுல் அவன் தன் பட்ட மகிஷிகளுடன் அநேக நோன்புகள் இருந்தான்; விரதங்கள் அனுஷ்டித்தான்; புண்ணிய தீர்த்தங்களில் நீராடினுன்; கோயில்களும் சத்திரங்களும் கட்டினுன். தானம்

செய்தான்; ஆயினும் மக்கட் பேறு அவனுக்குக் கிட்டவில்லை. ஆதலால், அவன் கடைசியில் தன் இராஜ்யத்தைத் தனது அமைச்சனிடம் ஒப்புவித்துக் காடு சென்று தனது குலதெய்வமான நீறுபூசிய மெய்யனைக் குறித்துக் கடுந்தவம் செய்தான். கொஞ்ச நாட்களுக்கெல்லாம் சிவபிரானுடைய திருவருளால் சோமேசுவரனுக்கு அவனது பட்டமகிஷி பாசலதேவியினிடம் மூன்று குழவிகள் பிறந்தன. அவர்கள் முறையே சோமேசுவரன், விக்கிரமாதித்தன், ஜயசிங்கன் எனப் பெயரிடப்பட்டார்கள்.

இரண்டாவது குமாரனை விக்கிரமாதித்தன் தமையன் சோமேசுவரனைக் காட்டிலும் அறிவிலும், சாமர்த்தியத்திலுஞ் சிறந்தவன். ஆதலால் சோமேசுவர ஆகவமல்லன், தன் முதற்பிள்ளை சோமேசுவரனுக்கு இளவரசுபட்டம் கட்டினாலும், விக்கிரமாதித்தனே இராஜ்ய பாரத்தைப் பெரும்பாலும் தாங்கி வந்தான். விக்கிரமாதித்தனது போர்த் திறமையைக் குறித்து பில்ஹணகவி மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அவன் மிகவும் பராக்கிரமசாலி. அவன் இந்தியா முழுதும் சென்று திக்குவிஜயம் செய்து வெற்றிக்கொடி நாட்டினான். மாளவ அரசனுக்கு உதவி புரிந்து அவனது எதிரியை வென்று அந்நாட்டை அவனுக்கு அளித்தான். பிறகு வங்காளம், அஸ்ஸாம் முதலிய இடங்கள் சென்று ஆங்காங்கு அரசு செய்தோரிடமிருந்து திறை வாங்கிக்கொண்டு, அங்கிருந்து கிழக்குத் தொடர்ச்சி மலை வழியாய்க் கேரளம் சென்று அத்தேயத்தரசனை வென்று, பிறகு சோழ இராஜனையும் போரில் புறங்கொடுத்தோடச் செய்து அவனுடைய தலை நகரமாகிய கங்கைகோண்ட

சோழபுரத்தைக் கைப்பற்றித் திரும்புகையில் தகப்பன் இறந்த செய்தி கேட்டு, சாளுக்கிய தேசத்துக்குச் சென்றான்.

முதலாம் சோமேசுவரனுக்குப் பிறகு அவனது மூத்த குமாரனும், விக்கிரமாதித்தனது தமையனுமான இரண்டாம் சோமேசுவரன் பட்டத்திற்கு வந்தான். அவன் கி. பி. 1068-லிருந்து கி. பி. 1076 வரையில் அரசு புரிந்தான். அப்பொழுது விக்கிரமாதித்தன் இளவரசு பட்டங்கட்டிக் கொண்டான்.

சிறிது காலம் எல்லாம் செவ்வனே நடந்தன. ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு சோமேசுவரன் நெறி தவறி நடக்கலுற்றான். உலோப குணத்தால் நல்லோரைக் குற்றஞ்சாட்டி அவர்களுடன் பகைமை கொண்டான். அதிகவரியைக்குடிகள் மீது சுமத்தினான். பெரியோரும் நல்லோரும் சொன்ன புத்திமதிகளை அலட்சியம் செய்து மிகக் கர்வத்துடனும் இறுமாப்புடனும் இருந்தான். அதுகண்ட விக்கிரமாதித்தன்,

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங்கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்."

என்ற நீதியை உணர்ந்தவனாதலால், அவன் எவ்வளவோ அரும்பாடுபட்டுத் தன் தமையனை நல்வழிக்குக் கொண்டு வர முயற்சித்தான். ஆயினும் அவைகளெல்லாம் பிரயோசனமற்றுப் போயின. அதனால், விக்கிரமாதித்தன் மனம் பொறாமல் தன் தம்பி ஜயசிங்கனுடன் கலியாணபுரத்தை விட்டுச் சென்றான்.

விக்கிரமாதித்தன் பெரிய போர்வீரனாதலால் சில மாதங்கள் கூட அவன் சும்மா இருக்கவில்லை. அவன் கேரள தேயத்தின்மேல் மறுமுறை படையெடுத்து

எதிரிகளைப் புறங்காட்டி யோடச்செய்து மிக்க பொருளை எடுத்துக்கொண்டு சோழ இராஜ்யத்திற்கு வந்தான். அங்கு அரசுபுரிந்த வீர இராஜேந்திரன் விக்கிரமாதித்தன் படையெடுத்து வந்த செய்தி யறிந்து, மிக்க நடுக்கமுற்றுத் தேகம் வியர்த்து அவ னிடம் சென்று சமாதானம் செய்துகொண்டான். பிறகு அம்மன்னன் தன் பெண்ணையும் அவனுக்கு மணம் செய்துகொடுத்தான். விக்கிரமாதித்தனும் அவன் பெண்சாதியும் துங்கபத்திரைக் கரையில் சுக மாகவும் சந்தோஷமாகவும் சிறிது காலம் வசித்து வந்தார்கள். அப்படியிருக்கையில் ஒரு சமயம், அவன் மாமனார் வீரஇராஜேந்திர சோழன் இறந்ததாகவும், சோழ நாடு தலைவனில்லாமல் மிக்க குழப்பத்துடன் இருப்பதாகவும் கேள்விப்பட்டு உடனே அதிவேக மாய் அங்குச் சென்று தன் மைத்துனன் அதிவீர ராஜேந்திர தேவனைச் சிங்காதனத்தி லிருத்தி, அவன் மறுபடியும் துங்கபத்திரைக்குத் திரும்பினான். ஆனால், சிறிது நாளைக்கெல்லாம் மறுபடி அதிவீர இராஜேந் திரதேவன் கொல்லப்பட்டதால் அந்த நாடு முழுதும் மிக்க குழப்பத்துடன் இருந்தது. ஆதலால் விக்கிர மாதித்தன் மறுபடியும் அங்குப் போக நேரிட்டது. அப்பொழுது இராஜ்யம் இருபிளவுபட்டு உள்நாட்டுச் சண்டை நடக்கலாயிற்று. அப்போரில் விக்கிரமாதித் தனும் அவன் தமையன் சோமேசுவரனும் எதிரெதி ராகச் சண்டை செய்தார்கள். அதில் சோமேசுவரன் தோல்வியடைந்து சிறைபிடிக்கப்பட்டு இராஜ்யத்தை இழந்தான்.

பின்னர் விக்கிரமாதித்தன் தரணியை ஆளும் பேறு பெற்றான். அவன் கி. பி. 1076-லிருந்து

கி. பி. 1127-வரையில் அரசாண்டான். அவன் சளுக்கிய விக்கிரம வருஷமென்னும் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினான். விக்கிரமாதித்தன் தம்பி ஜயசிங்கனுக்கு இளவரசு பட்டம் கட்டப்பட்டது.

பட்டாபிஷேகம் செய்து கொண்ட கொஞ்ச நாளைக்கெல்லாம் விக்கிரமாதித்தன் திக்குவிஜயத்திற்குப் புறப்பட்டான். அவன் எல்லா தேயத்தரசர்களையும் வென்று திரும்பினான். பிறகு அவன் மிக்க வனப்பு வாய்ந்த சந்திரலேகையைச் சுயம்வரத்தில் வென்று மணம் புரிந்துகொண்டான். அவளது அழகை வெகு விரிவாகப் பாதர்திகேச பரியந்தம் பில்ஹணகவி எடுத்துரைத்திருக்கிறார்.

புன்னை செய்யாறு வட்டம்

விக்கிரமாதித்தன் சந்திரலேகையையே பட்டமகிஷியாக்கிக் கொண்டான். இவளைத் தவிர விக்கிரமாதித்தனுக்கு அனேக மனைவியர் உண்டு. அவர்கள் முறையே, மயிலாலதேவி, மலயமாதேவி, லக்ஷ்மிதேவி, ஜக்கலதேவி எனப்படுவர். ஆனால சந்திரலேகாவே விக்கிரமாதித்தனது ஆசைக் கிழத்தியாக இருந்தாள்.

விக்கிரமாதித்தனது பிள்ளைகளுள் மூத்தோன் பெயர் ஜயகர்ணன். அவன் விஜயபுரத்தை ஆண்டு தந்தை காலத்திலேயே தரணியை நீத்தான். இளையோனை சோமேசுவரன் தன் தந்தைக்குப் பிறகு கி. பி. 1127-ல் சிங்காதன மேறினான். அவன் கல்விக் கடலைக் கரைகண்டவன். விக்கிரமாதித்தனுடைய தம்பி ஜயசிங்கன் முதலில் தமையனிடம் மிகவும் பக்தி விசுவாசத்துடன் இருந்தாலும், கடைசியில் அவன் சோழ அரசனுடன் சேர்ந்து விக்கிரமாதித்தனுடன் சண்டை செய்தான். அதன் காரணமாக அவன் தன்னுடைய நாட்டை இழந்தான்.

விக்கிரமாதித்தன் காலத்தில் அவனது இராஜ்யம் ஒரு குறைவுமில்லாமல் விளங்கிற்று. நன்செய், புன்செய் முதலிய நிலங்களும், காய் கனி மரங்களும் நன்றாகப் பயிராக்கப்பட்டு நாட்டின் வளப்பம் ஓங்கியிருந்தது. செழுமையே எங்கும் பரவியிருந்தது. இயற்கையில் விரோதமுள்ள பிராணிகளும் நட்புப் பூண்டு நடந்தன. புலியும் ஆடும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தன; சிங்கமும் நரியும் சேர்ந்து வசித்தன. மிருகங்களே இப்படியிருந்தன வென்றால் மானிடர் வாழ்வைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! நாட்டில் ஒரு சச்சரவுமில்லாமல் ஜனங்கள் தங்கள் தங்களுடைய தொழிலைச் செய்து வந்தார்கள். உன்னத மாளிகைகளும், சிறந்த சிங்காரத் தோட்டங்களும் நிறைந்து கலியாணபுரம் பூவுலக கைலாசம் போல் விளங்கிற்று. தருமம் தழைத்தோங்கி இருந்தது. மாதமும்மாரி வழுவாது பெய்து வந்தது. விக்கிரமாதித்தன் மனுநீதி தவறாது செங்கோல் செலுத்தி வந்தான். அவன் அந்நாட்டை ஆண்ட வன்மையின் காரணமாக அவன் இறந்த பிறகு ஐம்பது வருடங்களளவும் அந்நாடு சீர்குலையாமல் இருந்தது. அதற்குப் பின் தக்ஷிணம் க்ஷீணிக்கத் தொடங்கிற்று.

தக்ஷிணம் முழுதும், விக்கிரமாதித்தனது ஆளுகைக் குட்பட்டிருந்தது. அவன் காலததில் அந்நாட்டில் திருடர் பயம் கிடையாது. குடிகள் சந்தோஷமாக இருந்தார்கள். அவர்கள் விக்கிரமாதித்தனைத் தெய்வமாகக் கொண்டாடி வந்தார்கள். விக்கிரமாதித்தன் சிவபிரானை வழிபட்டு வந்தாலும் பிறமதஸ்தர்களைத் தண்டிக்கவில்லை. ஜனங்கள் அவரவர்களது இஷ்டம்போல், கடவுளை வழிபட்டு வந்தார்கள். புண்

ணிய காலங்களில் விக்கிரமாதித்தன் புண்ணியதீர்த்தங்களில் நீராடித் தானங்களைச் செய்தான்; இராஜ்பத்தில் அனேக இடங்களில் கிணறுகளை வெட்டிவைத்தான்; விக்கிரமபுரம் என்னும் ஒரு சிறந்த நகரத்தைத் தன் பெயர் விளங்கக் கட்டினான். அவன் தனது சபையில் அநேக வித்துவான்களை ஆதரித்தான். அவர்களில் முக்கியமானவர்கள், விக்கிரமாதித்தனுடைய சரித்திரத்தை எழுதிய பில்ஹணகவியும், மிதாக்ஷரம் என்னும் தர்மசாஸ்திரத்தை எழுதிய விஞ்ஞானேஸ்வரருமே யாவர்.

விக்கிரமாதித்தன் தரும நெறி தவறாமல் ஆட்சி செய்து, கி. பி. 1127ல் விண்ணுலகை யடைந்தான்.

## 5. கிருஷ்ணதேவராயர்

ஆங்கிலேயரது ஆட்சி வரையில், இந்தியாதேயம் முழுதும் ஓர் அரசனது ஆளுகைக்குட்படா விட்டாலும், அவ்வப்பொழுது சில சக்கரவர்த்திகள் தோன்றித் தாங்களே வல்லரசுகளாக விளங்கினார்கள். அவர்களது ஆட்சிக்குள் இந்தியாவின் வெகு பாகம் அடங்கி வந்தது. அவர்களுள் கிருஷ்ணதேவராயர் ஒருவர். அவர் 15-ம் நூற்றாண்டின் இறுதியிலும், 16-ஆம் நூற்றாண்டின் முதலிலும் தென்னிந்தியா முழுதும் தனிச்செங்கோல் செலுத்தி வந்தார்.

கிருஷ்ணதேவராயர் நரபதி வம்சத்தில் தோன்றியவர். அவரது இராஜ்பத்தின் தலைநகர், இப்பொழுது பல்லாரிக்கு மேற்கே சுமார் 30 மைலுக்கப்பாலுள்ள ஹோஸ்பெட்டுக்கு ஆறுமைல் தூரத்தில் பாழடைந்

திருக்கும் ஹம்பி என்று சொல்லப்படும் விஜயநகரம். அதற்கு வித்தியாரண்ய நகர் என்ற பெயரும் உண்டு. ஏனெனில் வித்தியாரண்ய முனிவர் என்னும் பெரியார் ஒருவர் இந்நகரை ஸ்தாபித்தனர். அதனால் இந்நகருக்கு அவரது பெயர் வழங்கலாயிற்று. இந்நாடே இராமாயணத்தில் சொல்லப்படும் கிஷ்கிந்தை யென்னும் நாடாம்.

நரபதி வம்சத்தின் முதலாவது அரசராகிய நரசிம்மராயருக்கு இளைய குமாரராக, கிருஷ்ணதேவராயர் தோன்றினர். அவர் சுமார் கி. பி. 1480-ல் நரசிம்மராயரது இரண்டாம் பெண்சாதி நாகம்மாள் வயிற்றில் உதித்தார். அவர் தன் தமையனும், நரசிம்மரது முதல் தாரத்தின் பிள்ளையுமான வீரநரசராயருக்குப் பிறகு கி. பி. 1509-ல் சிங்காதனமேறி, 22 ஆண்டுகள் இவ்வையகத்தை ஆண்டுவந்தார். அவர் அரசு புரிந்து வந்த ஆண்டுகள் முழுதும், தென்னிந்தியா பூவுலக கைலாயம்போல் விளங்கினது. கிருஷ்ணதேவர் தான் தமது தந்தையுடைய செல்வகுமாரர். குழவிப் பருவ முதல், அவர் தமது வீரத்தையும் நுட்ப புத்தியையுங் காட்டி வந்தார். அவர் நடுத்தர உயரமும், அழகமைந்த உருவமும் உடையவராய் விளங்கினர். அவரது உடம்பு கொஞ்சம் ஸ்தூலித்து இருந்ததெனினும், கவாத்து, சிலம்பு இவைகள் செய்யும் வழக்கத்தால் அவர் புயங்கள் திரண்டிருந்தன. அவரது முகத்தில் அம்மைத் தழும்புகள் காணப்பட்டன; பார்வைக்கு அவர் மிகக் கம்பீரத்துடன் விளங்கினர்.

அவர் சிங்காதன மேறியதும் திக்கு விஜயம் செய்யப்புறப்பட்டார். இராஜ்யம் ஒற்றுமை இல்லாமலும்,

சிற்றரசர்கள் ஒருவர்மேல் ஒருவர் அழுக்காறுகொண்டு எப்பொழுதும் சச்சரவுகள் செய்துகொண்டும் இருந்த தனுல், கிருஷ்ணதேவராயர் அவர்களை அடக்கி நாட்டை ஒழுங்கு படுத்தவேண்டி, தமது மந்திரி திம்மராசுடன், ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு கிளம்பினுர். திம்மராசு கிருஷ்ணதேவரது தகப்பனுர் காலம் முதல், முதல் மந்திரியாகவிருந்து வந்தார். அவர் மிகவும் சமர்த்தர். ஒரு பெரிய இராஜ தந்திரி. கிருஷ்ணதேவரை அவரே வளர்த்து அவருக்கு அரச இலக்கணங்களையெல்லாம் கற்பித்து வந்ததால், அவ ரைக் கிருஷ்ணதேவர் தகப்பன் போல் பாவித்து வந் தார். அவரை அப்பாஜி என்று அவர் கூப்பிட்டு வந்தார். இன்றைக்கும் திம்மரசின் பெயர் அப்பாஜி என்றே வழங்கப்படுகிறது.

கிருஷ்ணதேவர் தெற்கே மைசூரை ஆண்டு வந்த கங்கர்களை யடக்கி, அநேக கோட்டைகளைத் தன் வயப்படுத்திக் கொண்டு, நெல்லூர் மார்க்கம் சென்று உதயகிரியையும் பிடித்துக் கொண்டார். பிறகு மேற் குப் பக்கம் சென்று மலையாளம் முதலிய இராஜ்யங் களை வென்று அங்குள்ள அரசர்கள தமக்குக் கப்பம் கட்டி வருமாறு செய்தார். அதன் பின்பு அவர் சேர சோழ பாண்டியரான தமிழ் நாட்டு மூவேந்தர்களையும் ஜயித்து விஜயநகரம் திரும்பினுர். அக்காலத்தில் வட இந்தியாவில் மகம்மதியர்களது ஆதிக்கம் அதிகமாக இருந்ததால் அவர் அதையும் அடக்கினுர். தவிர, ஆந்திரநாட்டிற்குச் சென்று கோண்டவீடு என்ற பிர தேசத்தை ஆண்டுவந்த அரசனைத் தோற்கடித்து அந்நாட்டைக் கைக்கொண்டார். இன்னும் இராஜ மஹேந்திரபுரம் முதலிய பற்பல ஊர்களைக் கைப்பற்றி

வெற்றி முரசுடன் தமது நகரை அடைந்தார். அவர் திக்கு விஜயம் சென்று திரும்பிவரப் பத்து ஆண்டுகள் ஆயின.

தக்ஷிணத்தை ஆண்டுவந்த மகம்மதிய அரசர்கட்கும் விஜயநகரத்தை ஆண்டுவந்த மன்னர்கட்கும் அடிக்கடி போர் நிகழ்ந்து கொண்டேயிருந்தது. காரணம் என்னவெனில், தக்ஷிணத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் நடுவேயுள்ள கிருஷ்ணா, துங்கபத்திரை நதிகளின் பிரிவுக்குட்பட்ட பிரதேசமான ராயச்சூர் என்னும் செழிப்பான பூமியைக் கைக்கொள்ள இருவரும் முயன்றனர். கிருஷ்ணதேவர் நாளிலும் அப்போர் நிகழ்ந்தே வந்தது. அப்பொழுது ஐரோப்பாவிலிருந்து போர்த்துக்கேசியர் என்போர் இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்தார். கிருஷ்ணதேவர் தேய மேம்பாடுக்கு வியாபாரமே முக்கியம் என்று அறிந்திருந்ததால், அவர் அவர்களுக்குக் கோவாவென்னும் நகரைப் பிடித்துக்கொடுத்து வியாபார ஸ்தலமாக்கிக் கொள்ள ஏற்பாடு செய்தார். இதனால் போர்த்துக்கேசியர் மிக்க நன்றியுள்ளவராகி, கிருஷ்ணதேவர் தக்ஷிண சுல்தான்களுடன் எப்பொழுது சண்டை செய்ய நேரிட்டாலும், அப்பொழுதெல்லாம் அவருக்குத் துணை செய்து வந்தார்கள். கிருஷ்ணதேவர் தமது முன்னோர் ஆண்ட ராய்ச்சூர் பிரதேசம் மகம்மதியர்களது ஆதிக்கத்தில் இருந்ததால், அதைத் தாம் மீண்டும் அடைய மிக்க கோரயுத்தம் செய்தார். எனினும் கடைசியில் கிருஷ்ணதேவரே வெற்றிபெற்று அப்பிரதேசத்தைத் தம் வயமாக்கிக் கொண்டார். அப்போரில் விஜயபுரத்து சுல்தானும் மற்றையோரும் யுத்தகளத்திலிருந்து புறங்காட்டி யோடினர்.

கிருஷ்ண தேவருக்குப் பல பட்டப் பெயர்களுண்டு. அவைகள், மகா இராஜாதி இராஜன், இராஜ பரமேசுவரன், ஆரிய ராயவிபாடன், கஜபதியாடன், நரபதிபூஷணன், ஸ்ரீவீரப்பிரதாபன் முதலிய பலவாம்.

கிருஷ்ண தேவரிடம் பராக்கிரமம் மாத்திரமன்றிக் கல்வி யறிவும் கூடியிருந்தது. அவர் ஆந்திர பாஷையாகிய தெலுங்கில் மிக்க பாண்டித்தியம் உடையவர். அவர் பற்பல புதகங்களை இயற்றினர். அவர் அத் தாய்ப்பாஷையை மிகவும் ஆதரித்தார். ஆதலால் அவருக்கு "ஆந்திர போஜன்" என்னும் பெயர் வழங்கலாயிற்று. வடமொழியிலும் அவருக்குப் பயிற்சியுண்டு. கிருஷ்ண தேவரது ஆஸ்தான பண்டிதர்கள் எண்மர். அவர்களை "அஷ்டகஜங்கள்" என்பார். அவர்கள் முறையே அலஸானி பெத்தன்ன, நந்தி திம்மன்ன, இளைய இராஜு இராமபத்திரன் தூர்ஜதி, மாதய்யகாரிமலலனன, பிங்களசூரன்ன, இராமஇராஜ பூஷணன், ஹாஸ்யகவி தெனலி இராமகிருஷ்ணன் எனப்படுவார்கள்.

இவர்களில் தெனலி இராமனைப்பற்றித் தெரியாதவர்கள் எவருமிரார்கள். அவனைப் பற்றி அநேக கதைகள் உண்டு. சிலர் அவன் விகட கவியானதைப் பற்றிக் கீழ் வருமாறு சொல்லுகிறார்கள். இராம கிருஷ்ணன் சிறு பிராயத்திலேயே கடவுள் பக்தியுள்ளவனாக இருந்ததாகவும், காளியைக் குறித்துத் தவம் செய்ததாகவும், காளி ஆயிரம் முகங்களோடு பிரசன்னமானதாகவும், அப்பொழுது அவன் கலகல வென்று நகைத்ததாகவும், காளி "ஏன் நகைக்கின்றாய்" என்று வினவ, இராமன் "தேவி, ஜலதோஷம் வந்தால் எங்க

ளுக்கு இந்த ஒரு மூக்கே மிக்க கஷ்டம் கொடுக்கின்றது. தாங்கள் ஆயிரம் மூக்குகளுடன் என்ன செய்வீர்க ளென்று நினைத்துச் சிரித்தேன்" என்று பதில் கூறின தாகவும், உடனே காளி "நீ விகட கவியாகக் கடவாய்" என்று சொல்லி மறைந்ததாகவும் ஒரு வரலாறு தொன்று தொட்டு வழங்கி வருகின்றது.

ஒரு சமயம் நாடகத்தில் கிருஷ்ணவேஷம் போட் டுக் கொண்டு வந்தவனைத் தெனாலி இராமன், மத்தால் அடித்தான். அவன் "ஐயோ" என்று அலற, அப் பொழுது இராமன் "என்ன விந்தை! கிருஷ்ணன் ஆயர்பாடியில் ஆயர்குல மக்கள்களிடம் அநேக மத் தடிகள் பட்டும் சிறிதும் அழவில்லை. நீ ஓரடிக்கே இப்படிக் கதறுகிறாயே" என அங்குள்ளோர் யாவரும் நகைத்தார்க ளென ஒரு கதை வழங்கி வருகிறது. இதனால் தெனாலிராமன் திறமை நன்கு விளங்குகிற தல்லவா?

மற்றொரு சமயம் தெனாலிராமன் செய்த ஏதோ ஒரு குற்றத்திற்காக கிருஷ்ணதேவர் அவனை நோக்கி இனி "நீ உன் தலையை என் முன் காண்பிக்காதே" என, அவன் மறுநாள் ஒரு சட்டியைத் தலையில் கவிழ்த்து முகத்தை மூடிக்கொண்டு சபைக்கு வந் தான். அதைக் கண்டு கிருஷ்ணதேவர் வயிறு குலுங்க நகைத்து அவனை மன்னித்தார். இராமன் இம்மாதிரி அநேக விகடங்கள் செய்து கிருஷ்ணதேவரையும் அவர் சபையிலுள்ளோரையும் களிப்பித்து வந்தான். அவன் செய்துவந்த பல வேடிக்கைகளால் அவர்களது மனக் கவலையும் அடிக்கடி நீங்கலாயிற்று.

## கிருஷ்ணதேவரது நற்செய்கைகள்

கிருஷ்ணதேவர் அனேக ஆலயங்கள் கட்டி அவை களுக்காக மானியங்கள் விட்டார்; பாழடைந்த கோயில் களைப் புதுப்பித்தும் கோபுரங்கள் கட்டியும் வந்தார். அவர் வைணவ மதத்தைத் தழுவியிருப்பினும் மற்ற மதஸ்தர்களையும் ஆதரித்து வந்தார். அவரது சமஸ் தான வித்துவான்களில் வைணவமத தாதாசாரியரும் சைவமத அப்பய்யதீக்ஷிதரும் முக்கியமானவர்கள். விஜயநகர இராஜ்யத்தில் போர்த்துகேசியரும் மகம் மதியர்களும்கூட அவரவர்களது மதாசாரத்தைச் சிறி தேனும் இடையூறில்லாமல் அனுசரித்து வந்தார்கள்.

கிருஷ்ணதேவர் விசாகப்பட்டணம் ஜில்லாவிலிரு க்கும் சிம்மாசலம் என்னும் க்ஷேத்திரத்திற்கு மனைவி மக்களுடன் சென்றார். அவர் அங்கு எழுந்தருளியிரா நின்ற நரசிம்மமூர்த்தியை வழிபட்டு அந்த எம்பிரா னுக்கு அநேக ஆபரணங்களை வழங்கித் திரும்பினார்.

அவர் தமது இராஜ்யத்தில் பலவிடங்களில், பாட சாலைகளும், தருமசாலைகளும், வைத்தியசாலைகளும், ரஸ்தாவில் வழிப்போக்கர் தங்க நிழல்தரு மரங்களும், கிணறுகள், குளங்கள் முதலியவைகளும் ஏற்படுத் தினார்; "முத்திதரு நகரில் முக்கியமாம் கச்சி" என்று மேன்மையாய்ச் சொல்லப்பட்ட காஞ்சீபுர ஸ்தலத் தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ வரதராஜப் பெருமா ளின் ஆலயத்துக் கோபுரங்களையும் கட்டினார்; தலை நகராகிய விஜயபுரத்தில் அதியற்புதமான மாடமாளி கைகளையும் கூட கோபுரங்களையுங் கட்டிவைத்தார். ஆனால், அங்குள்ளவைகளில் பல இப்பொழுது பாழாகப் போயின.

## கிருஷ்ணதேவரது ஆட்சியின் மாட்சி

கிருஷ்ணதேவர், தேய நன்மையும், குடிகளது நன்மையுமே கோரி அரசு செலுத்தினார். அவர் குடிகளுக்கு அநேக நன்மைகள் புரிந்தார்; நியாயஸ்தலங்களில் நீதி விசாரணை சரிவர நடக்குமாறு மேல் பார்வை பார்த்து வந்தார். உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் சரியாக நடத்துகிறார்களா வென்று வேவுகாரர்கள் மூலம் அறிந்து வந்தார்; நகர்க்காவலர்கள் ஊரைச்சுற்றிக் கொலை களவுகள் நடவாதபடி ஊக்கமாகப் பார்த்து வருகிறார்களாவென்று அறியும் பொருட்டுத் தாமே மாறுவேடம் பூண்டு நகர் சுற்றி அறிந்து வருவார். தேசவாழ்விற்கு விவசாய விருத்தியே காரணமாதலால் அத்தொழில் செய்யும் வேளாண் குடிகளுக்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்தார்; கிணறுகள் வெட்டவும், ஆடுமாடுகள் வாங்கவும், விவசாயத் தொழிலுக்கு வேண்டிய கருவிகள், விதைகள் முதலியவை வாங்கவும், குடியானவர்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன்கொடுத்துவர வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். அவர் ஆறிலொரு பாகமே தீர்வை வாங்கி வந்தார். மழையில்லாமலோ, பஞ்சத்தினாலோ வேறு எக்காரணத்தாலோ குடிகள் தீர்வை செலுத்தக் கூடாமற் போனால், கட்டாயப்படுத்தி வாங்கவேண்டாம் என்று வரி வசூலிப்போருக்கு அவர் கட்டளையிட்டு வந்தார். மற்றும் அவர் காடுகளையும், கட்டாந்தரைகளையும் ஜனங்களுக்கு இனாமாக வளித்து, அவைகளைச் சாகுபடி செய்யவும் அல்லது வீடுகள் கட்டிக் குடியிருக்கவும் ஏற்பாடு செய்தார்.

அந்த அரசர் துங்கபத்திரை நதியில் ஓர் அணை கட்டி அதன் நீரை விஜயநகரத்திற்குள் திருப்பினார்;

நன்செய் புன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக அனேக கால்வாய்களும் ஒரு பெரிய குளமும் வெட்டினார்; கைத்தொழில் வியாபாரம் முதலியவைகளை விருத்தி செய்தார்; அவைகளுக்கு வேண்டிய பொருளுதவியும் செய்தார். அதனால் விஜயநகரம் ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக விளங்கிற்று. அரேபியா, பாரசீகம், சீனு, ஜாவா, சுமாத்திரா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள வியாபாரிகளும் தமது சரக்குகளை விஜயநகரத்திற்குக் கொண்டுவந்து வர்த்தகம் செய்து வந்தார்கள்.

மேற்சொல்லிய நன்மைகளைத் தவிர, அவர் தமது இராஜ்யம் முழுதும் கல்லூரிகளும் அக்கிரகாரங்களும் கட்டுவித்தார். அதனுல், கிருஷ்ண தேவரைக் குடிகள் தருமதேவதை யெனக் கொண்டாடி வந்தனர்.

## கிருஷ்ணதேவரது குடும்பம்

கிருஷ்ணதேவருக்கு அனேக மனைவியர் இருந்தனர். அவர்களில் இருவரே முக்கியமானவர். முதலில் அவர் கனிக்கிரியையாண்ட வீரருத்திர கஜபதியின் பெண்ணுகிய சின்னதேவியை மணந்தார். ஆயினும அம்மணம் அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. ஏனெனில் சின்னதேவியின் தாயார் முதலானவர்கள் கிருஷ்ணதேவரைத் தாசி மைந்தனென்று இழிவாகப்பேசி, பள்ளியறையில் அவரைக் கொல்லச் சின்னதேவியைத் தூண்டினார்கள். அவளும் அவ்வாறே செய்ய எத்தனித்தாள். இதைக் கண்டு கிருஷ்ண தேவர் அப்பாஜியின் யோசனையின்மேல் அவளைப் புறக்கணித்து அவளுக்கு வேண்டிய செல்வத்தையும் கொடுத்தனுப்பி விட்டார். சின்னதேவியும் கிருஷ்ண

தேவரது உதாரகுணத்தைக் கண்டு மெச்சி, தான் அவரைக் கொல்லத் துணிந்ததற்கு மிகவும் வருத்தமுற்று, உலக வாழ்க்கையை வெறுத்துச் சன்னியாசினியாகத் துறவிவேடம் பூண்டு, கடப்பை ஜில்லாவிலுள்ள ஒரு வனத்தில் காலங்கழிக்கலானாள். அது முதல் உலகத் தவருக்குத் தான் எவ்விதத்திலும் பயன்படவேண்டும் என்றே உழைத்து வந்தாள். பொது ஜனநன்மையை வேண்டித் தனக்குக் கிருஷ்ண தேவரால் அளிக்கப்பட்ட செல்வத்தைக் கொண்டு, பன்னிரண்டு சதுர மைல் விஸ்தீரணமுள்ள கம்பம் ஏரியை வெட்டி வைத்தாள்.

கொஞ்ச காலங்கழித்து கிருஷ்ண தேவர், ஒரிஸ்ஸா நாட்டு வேந்தன் பிரதாபருத்திரன் மகள் திருமலா தேவியை மணஞ் செய்துகொண்டார். அவ் வம்மை ரதியைப் பழித்த வனப்பு வாய்ந்த சரீரம் உடையவள். குணத்திலும் கல்வியறிவிலும் சரஸ்வதிக்கு ஒப்பானவள். கற்பில் நளாயினிக்கு ஈடானவள். ஆயினும் அவள் தாசிமகனைக் கடிமணம் புரிந்தாளென்று அவள் தாய் முதலியோர் ஏசிப்பேசிப் புருஷனைக் கொலை புரிமாறு அடிக்கடி தூண்டியதால், "கல்லுங் கரையும்" என்ற முதுமொழி பிரகாரம், அவளும் ஒருவாறு அக் கொடிய செயலைச் செய்யச் சம்மதித்தாள். ஆனால், அப்பாஜி எப்படியோ அவள் எண்ணத்தை அறிந்து கொண்டு தமது புத்தி நுட்பத்தால் அவளை அக் காரியம் செய்யவொட்டாமல் தடுத்து, அவளுக்கும் புத்திபுகட்டி கிருஷ்ண தேவரைச் சரண மடையச் செய்தான். அதுமுதல் கிருஷ்ணதேவரும் திருமலா தேவியும் பூவும் மணமும் போலவும், பாலும் நீரும் போலவும், உயிரும் உடம்பும் போலவும், ரதியும் மத

னும் போலவும் இணைபிரியாமல் ஒருவரையொருவர் நேசித்து வந்தனர். அவர்களுக்கு இலக்குமிதேவி என்னும் செல்வப் புதல்வி யொருத்தி பிறந்தாள். அவள் கல்வியைக் கசடறக் கற்றுக் கலைமகள் போல் விளங்கினாள். அவளும் கிருஷ்ணதேவராயரைப் போல் கவிபாடும் திறன் பெற்றிருந்தாள். அவளை முப்பத்திரண்டு இலக்கணங்களும் பொருந்தியிருந்த இராம இராஜனென்ற ஒரு ஜாகீர்தாருக்குக் கிருஷ்ணதேவர் மணஞ்செய்து கொடுத்தார். அப்பொழுது அவர் ஆதோனி கோட்டையை ஸ்த்ரீதனமாக அவளுக்களித்தார்.

இலக்குமி தேவிக்கு மணமுடியும் வரையில் கிருஷ்ணதேவருக்கு வேறு புத்திர சந்தானம் இல்லாமலிருந்தது. ஆனால், அதற்குப் பிறகு சகல இலக்கணங்களும் பொருந்தி முருகனைப் போல் அவ்வளவு அழகுடன் ஒரு பிள்ளை பிறந்தது. அப்பொழுது கிருஷ்ணதேவர், ஒரு பிறவிக்குருடனுக்குத் திடீரென்று கண் பார்வை வந்தால் எவ்வளவு சந்தோஷம் உண்டாகுமோ அவ்வளவு ஆனந்தத்தை யடைந்தார். அநேக ஆலயங்களில் கடவுளுக்கு அர்ச்சனையும் அபிஷேகமும் செய்வித்தார். விரைதானம், சுவர்ணதானம் முதலியவற்றை ஏராளமாகச் செய்தார். அவர் மதலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறைச்சந்திரன் போல வளர்ந்து தனது மழலைச் சொற்களால் பெற்றோர் மனங் களிக்கச் செய்தது. பிறகு ஐந்து வயது ஆனவுடன் அப்பாலனைப் பள்ளியில் வைத்து அக்ஷராப்யாசம் செய்வித்துப் பிறகு அரசர்களுக்கு வேண்டிய கல்வியைப் போதித்தார்கள். அப்பொழுது கிருஷ்ணதேவருக்குத் தகப்பன் போல

இருந்த அப்பாஜி தேக வியோகம் அடைந்தார். அதனால் கிருஷ்ணதேவர் மிகவும் வருத்தப்பட்டார். அந்த வருத்த மிகுதியால் தமது அலுவல்களையும் சரி வரப் பார்க்கக்கூடவில்லை. அச்சமயம் கிருஷ்ணதேவரது விரோதிகள் அவருடைய குமாரனுக்கு நஞ்சிட்டு அவனது உயிரைப் போக்கினார்கள். அவர் அதைக் கேட்டதும் இடி விழுந்தாற் போல் ஓவென்றலறிக் கண்ணீர் விட்டுப் புரண்டழுதார்; மனம் துடி துடிக்க "ஆ என் பாலனே! எனக்கு இத் துயரம் கொடுக்கவா நீ இப் பூவுலகில் அவதரித்தாய்" என்று கதறினார். ஆயினும் "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?" வாரார். ஆதலால் அவர் ஒருவாறு மனச் சமாதானம் அடைந்தார்; எனினும் அதுமுதல் நாளுக்குநாள் உடம்பு குன்றி கி. பி. 1531-ல் அவர் தமது உயிர் நீத்தார்.

அவருக்குப் பின் அவருடைய தம்பியான அச்சுத தேவராயர் பட்டத்திற்கு வந்தார். ஆயினும் கிருஷ்ண தேவருக்குப் பிறகு அந்த இராஜ்யம் அவ்வளவு உன்னத நிலைமையிலில்லை.

## 6. சிவாஜி

இந்தியா முழுமையும் பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் மகம்மதியரது ஆதிக்கத்தில் இருந்தது. வடக்கே ஹிந்துஸ்தானத்தில் மொகலாயரது ஆட்சியும் தக்ஷிணத்தில் மகம்மதிய சுல்தான்களது ஆட்சியும் ஓங்கி இருந்தன. அப்பொழுது அவர்கள் ஹிந்துக்களைத் தலையெடுக்க வொட்டாமல் செய்து வந்தனர். ஹிந்துக்கள் பட்ட கஷ்டம் சொல்ல முடி

யாது; எழுதவும் சாத்தியப்படாது. அவர்களுக்கு ஒரு வித சுதந்தரமும் இல்லை; அடிக்கடி இஸ்லாத்தைத் தழுவக் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். அப்படி அவர்கள் செய்யாவிட்டால் ஜாஸியா என்னும் தலைவரி கொடுக்கவேண்டும். ஆனால் அவ்வாறு ஹிந்துக்கள் பட்ட கஷ்டங்களுக்கு அவர்களது ஒற்றுமையின்மையும், சரியான தலைவனில்லாமற் போனதுமே காரணங்களாக விருந்தன. அக்காலையில்தான் பம்பாய் இராஜதானியின் ஒரு பாகமாகிய மகாராஷ்டிர நாட்டில் சிவாஜி பிறந்து வளர்ந்தான். பிற்காலத்தில் சிவாஜி மகாராஷ்டிரத்தை ஒன்றுபடுத்திச் சீராக்கி, மகம்மதியர்களது ஆதிக்கத்தை வீழ்த்தி மகாராஜாவென முடிசூடி, எல்லா முடியுடை வேந்தர்களும் தன்னை வணங்குமாறு செய்து முடித்தான். இங்ஙனம் சிவாஜி மறுபடியும் ஹிந்துக்களது வலிமையை ஓங்கச் செய்து அவர்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினான்.

சிவாஜி பழைய பெரிய மகாராஷ்டிர குடும்பமொன்றில் பிறந்தான். அவனுடைய தகப்பன் ஷாஜி பான்ஸ்லே என்பவன். ஷாஜியின் தகப்பன் மாலோஜி ஒரு பெரிய ஜாகீர்தார். ஷாஜி விஜயபுரத்து சுல்தானிடம் தளகர்த்தனாக இருந்தான். சிலரது கொள்கை சிவாஜி க்ஷத்திரியன் என்பதே. ஏனெனில் ரஜபுதனத்திலுள்ள மீவார் இராஜ்யத்தை ஆண்டுவந்த ஸெஸோடிய வம்சத்தைச் சார்ந்த தேவராஜன் என்பவன் மகாராஷ்டிரத்தை அடைந்ததாகவும், அவனுடைய சந்ததியிற் பிறந்தவனே சிவாஜி என்றும் பல தக்க காரணங்களுடன் சில ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அதுஎவ்வாறாயினும், சிவாஜி கி. பி. 1627ல் ஏப்ரல் மாதம் 10ம் தேதி பிறந்தான் என நன்கு தெரிகிறது.

சிவாஜியின் தாய் ஜிஜாபாய் என்னும் ஒரு குண வதி. அவள் பூனவிற்கு 50மைல் தூரத்திலுள்ள சிவ னேரி கோட்டையில் பூரண கர்ப்பிணியாக இருக்கும் பொழுது, அவளுடைய கணவன் ஷாஜியைச் சில விரோதிகள் துரத்திச் சென்றனர். அதனால் அவள் அங்குத் தனித்திருக்க நேர்ந்தது. அப்பொழுது ஜிஷா பாய் தன் கணவனாகிய ஷாஜி எப்படியாவது உயிர் தப்பிச் சுகமாயிருக்கவேண்டுமென்று சிவை என்னும் கடவுளைத் துதித்தும் வழிபட்டும் வந்தாள். தனக்குப் பிறக்கும் குழந்தைக்கு அக் கடவுளின் பெயரையே வைப்பதாகவும் சொல்லிக் கொண்டாள்.

அவ்வாறே, பிறந்த குழந்தைக்குச் சிவாஜி எனப் பெயரிட்டாள். ஜிஜாபாய் தன் குழந்தையுடன் புனு சென்று அவர்களுடைய கோட்டையில் வசித்து வந் தாள். சிவாஜி நாளொரு மேனியும் பொழுதொரு வண் ணமுமாக வளர்ந்து மழலைச் சொல்லுடன் முறையே தவழ்ந்து, நடந்து, ஓடி விளையாடிக் கண்டோர் மனம் களிக்கும்படி பால பருவத்தை அடைந்தான். ஷாஜி யின் நிலங்களைப் புனுவில் பார்த்து வர ஓர் அந்தணன் நியமிக்கப்பட் டிருந்தான். அவன் பெயர் தாதாஜி கோண்டதேவன். சிறுவனாகிய சிவாஜியை ஷாஜி யைப் போல் ஒருதலைவனாகச் செய்ய வேண்டுமென்று கொண்டதேவன் மிகவும் பாடுபட்டான். யானை யேற்றம், குதிரை யேற்றம், வில்வித்தை, வாள் வித்தை ராஜதந்திரங்கள், விவசாயம் முதலிய எல்லா வித்தைக ளிலும் சிவாஜி பயிற்சி பெற்றான். ஆனால் அவனிடம் மகம்மதியர்கள்மேல் வெறுப்புக் குடிகொண்டிருந்தது. அந் நாளில் மகம்மதியர்களே அரசு புரிந்து வந்த தாலும், சிவாஜியின் தகப்பன் ஷாஜி விஜயபுரத்து

சுல்தானிடம் தளகர்த்தனுக இருந்தான். அதனுல் சிவாஜியிடம் குடிகொண்டிருந்த வெறுப்பையும் பகைமையையும் மாற்ற, கொண்டதேவன் எவ்வளவு முயன்றும் பயன்படவில்லை. நாளுக்குநாள் அவ் வெறுப்பு அதிகமாயிற்றே யொழியக் குறையவில்லை.

ஜிஜாபாய், ஒழிந்த நேரங்களில் சிவாஜியைப் பக்கலிலிருத்தி, இந்தியா தேயத்துச் சிறந்த போர் வீரர்களது சரிதைகளையும், புராணக் கதைகளையும் அவனுக்குச் சொல்லுவாள். அவைகளைக் கேட்கும் பொழுதெல்லாம் இராமனைப் போலவும், அர்ஜுனனைப் போலவும், தானும் பராக்கிரமசாலியாகி உலகில் தன் கீர்த்தியையும் நாட்டவேண்டுமென்ற அவா அவனுக்கு மிகவும் அதிகரித்தது.

சிவாஜி அவனது பதினைன்காவது வயதிலேயே மிக்க புயபல பராக்கிரமத்துடன் விளங்கினுன். சுறுசுறுப்பும், கூர்மையாய்க் கவனித்து ஊகிக்கும் குணமும் அவனிடம் பொலிந்தன. குதிரைகள், யானைகள் முதலியவைகளின் குணங்களையும் அவன் நன்கு அறிந்திருந்தான். பெரியோர்களையும், கற்ருேர்களையும் அவன் பேணி வந்தான்; நல்லவைகளை உணர்ந்தும் கெட்டவைகளை வெறுத்தும் வந்தான். இந்துக்களுடைய இராஜ்யம் சீர்குலையச் செய்தவர்கள் மகம்மதியர்கள் என்று அவன் அறிந்திருந்ததால், அவர்களை மட்டுமே அவன் மிகவும் வெறுத்து வந்தான். ஒரு சமயம் சிவாஜி தன்னுடைய தாதை ஷாஜியுடன் விஜயபுரம் சென்று சுல்தானைச் சந்திக்க நேரிட்டது. அங்குச் செல்வோ ரனைவரும் தமது தலை நிலத்தில் படும்படி சுல்தானை வணங்க வேண்டியது முறைமை

யாதலால், ஷாஜியும் அவ்வாறே செய்தான். ஆயின் சிவாஜி அப்படிச் செய்யவில்லை. அதனால் சுல்தான் முகத்தில் கோபக்குறி காணப்பட்டது. ஆனால் ஷாஜி சிவாஜி அரண்மனைக்கு வந்தது அதுவே முதல் தடவையாதலால், அவன் ஒருவித பயத்தினாலும் குழப்பத்தினாலும் முறைப்படி சுல்தானை வணங்கவில்லை என்று அவருக்குச் சமயோசிதமாகச் சமாதானம் கூறித் தன் தனயனை அழைத்துக்கொண்டு மாளிகைக்குத் திரும்பினான்.

மற்றொரு சமயம் சிவாஜி விஜயபுர நகரின் கடைத் தெரு வழியே சென்று கொண்டிருக்கையில், சில மகம்மதியர்கள் பசுக்களைக் கொன்று கொண்டிருப்பதைப் பார்த்து மனம் பதைபதைத்துக் கண்களில் தீப்பொறி பறக்கக் கோபாவேசத்துடன் அவர்களோடு சண்டை செய்து, அவன் ஒருவனாகவே பலரை வீழ்த்தினான்.

தவிர, கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, ஷாஜி தன் மகனைச் சுல்தானிடம் வேலைக்கு அமரச் சொல்லிய போது, அவன் அதை மறுத்ததல்லாமல், தன் தகப்பனையும் ஏசினான். இவைகள் சிவாஜியினுடைய மன நிலைமையை நன்கு அறிவிக்கின்றன. ஷாஜியும் தன் குமாரனைச் சீக்கிரம் புனாவுக்கு அனுப்புவதே சிறந்த தென்று நினைத்து அப்படியே செய்தான்.

சிவாஜி சிறு பிராயத்திலேயே, ஸையிபாய், ஸோயாராபாய் என்னும் இரு பெண்களை மணம் புரிந்தான். அவன் புனாவிற்குத் திரும்பியதுமுதல் அடிக்கடி வெளியிற் சென்று, தன் மலை நாடாகிய மகாராஷ்டிரம் முழுதும் சுற்றி வந்தான். அம் மலைநாட்டில் குடியிருக்கும் மனிதர்கள் அவனுடன் அடிக்கடி செல்வது

வழக்கம். சிறிது காலத்தில் அவன் தன் நாட்டின் ஒவ்வொரு மூலையையும் தெரிந்துகொண்டான். அம் மலைவாசிகளில் அநேகர் சிவாஜியின் கம்பீரத்தையும் வலிவையுங் கண்டு அவனிடம் சேர்ந்தார்கள். அதனால் சிவாஜி தன்னுடைய இருபதாம் வயதிற்குள் ஒரு பெரிய சேனையைத் தயாரித்தான். அவர்கள் நாகரீக மற்ற காட்டு மனிதர்களாக இருந்ததால், அவர்களை ஒழுங்கான ஒரு சேனையாகத் தயாரிக்க எளிதில் முடியவில்லை. இருப்பினும் சிவாஜி எடுத்த காரியத்தை முடிக்காமல் விடாதவனானதால், அவன் மிக்க ஊக்கத் துடன் சண்டை செய்யவும், ஆயுதங்களை உபயோகிக் கவும், குதிரைச் சவாரி செய்யவும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தான். அதன் பிறகு வெகு காலமாகத் தன் மனதில் குடிகொண் டிருந்த எண்ணத்தை நிறை வேற்ற முயன்றான். அவன் மகம்மதியரது ஆதிக்கம் சீர்குலைந்து இந்துக்களது வன்மை ஓங்க அரும்பாடு பட்டான்.

அக்காலத்தில் மகராஷ்டிரம் முழுதும் கோட் டைகளாகவே யிருந்ததால் அவன் ஒவ்வொரு கோட் டையையும் பிடித்து, அவைகளைப் பழுது பார்த்து மிகவும் பலமாகச் செய்து, ஒவ்வொன்றிலும் தனக்கு உண்மையாளனை ஒருவனை ஒரு சிறிய சேனையுடன் தலைவனாக நியமித்தான். இவ் விதமாகத் தோர்ண, சிவனேரி, கோண்டன, புரந்தரம் முதலிய கோட்டை களை அவன் தன் வயப்படுத்திக் கொண்டான்.

இவ்வாறு அவன் மகாராஷ்டிரத்திலுள்ள சில கோட்டைகளைப் பிடித்து ஒழுங்கு படுத்திய பிற்பாடு, விஜயபுரத்து சுல்தானுக்குச் சொந்தமாக மகாராஷ்

டிரத்திலிருந்த அநேக கோட்டைகளின்மேற் தன் கவனத்தைச் செலுத்தினன். பின்பு அவன் அவைகளை யும் முற்றுகை போட்டுப் பிடித்துக்கொண்டான். இச் சமாசாரம் சுல்தானுக் கெட்டியவுடன் அவனுக் குண் டான ஆச்சரியத்திற்கும் கோபத்திற்கும் அளவில்லை. ஏனெனில், தக்ஷிணத்தில் சுல்தான்கள் ஒருவருக் கொருவர் சண்டையிட்டனரே யொழிய, இந்துக்கள் அவர்களை எதிர்த்ததில்லை. இப்பொழுது ஒரு வாலிப னது துணிகரச் செயலைக் கண்டு அவன் மிகவும் ஆச் சரியப்பட்டான்; ஒருகால் ஷாஜி தன் மகனை இவ் வாறு தூண்டியிருப்பாறோ வென்று ஐயுற்று அவனை ஒரு கல்லறையில் அடைத்து வைத்தான். அவ்வறை யில் சுவாசம் வெளியே போக மாத்திரம் ஒரு சிறு துவாரமிருந்தது. சுல்தான் அதையும் மூடிவிடுவதாக ஷாஜியைப் பயமுறுத்தினன். ஆயினும் தந்திரமே உருவாக எடுத்து வந்திருக்கும் சிவாஜியிடம் சுல்தான் என்ன செய்யக்கூடும்! சுல்தான் தன் தகப்பனைப் பாசறையில் அடைத்து வைத்ததற்குக் காரணம் தன் செயல்களே யென்று சிவாஜிக்குத் தோன்றினல், உடனே அவன் தனக்குக் கீழ்ப்படிந்து விடுவான் என் பது சுல்தானுடைய துணிபு. ஆனல், சிவாஜி தான் விஜயபுரத்திற்குச் சொந்தமான கோட்டைகளைப் பிடிப்பது மொகலாயர்களுக்காகவே யென்றும் சக்கர வர்த்திக் குட்படத் தான் தயாராக இருப்பதாகவும் அவருக்கு மனுச் செய்துகொண்டு, உடனே தன் தகப்பனை விடுவிக்குமாறு சுல்தானுக்குக் கட்டளையிட வேண்டினன். அவ்வாறே அவன் செய்ய, ஷாஜி விடுதலை யடைந்தான். அப்பொழுதுதான் தன் தனயனுடைய சாமர்த்தியமும் அறிவும், வன்மையும் ஷாஜிக்குத்

தெரிந்தது. பின்பு ஷாஜி தன் குமரன் செய்கையை நினைத்து நினைத்துக் களிப்பெய்தினன்.

சிவாஜி மேன்மேலும் விஜயபுரத்தைத் தொந்தரவு செய்தான். ஆதலால் சுல்தான் தன் சபையில் "இச் சிவாஜியாகிய இந்துச் சிறுவனை அடக்கக் கூடியவர் எவரும் இல்லையா" வென, மிக்க பராக்கிரமசாலியும் வீரனும் எங்கும் ஜெயக்கொடி நாட்டியவனுமான அப்சல்கான் எழுந்து "மன்னு! நீர் யாதொன்றுக்கும் யோசிக்க வேண்டாம். ஒரு நொடியில் அந்த மலைநாட்டுப் பயலைப் போரில் புறங்கொடுத்து ஓடச்செய்து கட்டிப் பிடித்துக் கொண்டு வந்து தங்கள் அடிகளில் அவன் முடியைச் சாய்க்கிறேன்" என்று வீரம் பேசி மிகப் பெரிய சேனையை ஆயத்தம் செய்து சிவாஜியின் மலைக்கோட்டையை நோக்கிக் கிளம்பினன். அப்சல்கான் படையெடுத்து வருவதைக் கேட்டவுடன் சிவாஜியும் அவனுடைய துணைவர்களும் சற்று அதைரியப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டனர். பின்பு சிவாஜி தன் குல தெய்வமாகிய ஸ்ரீ பவானி தேவியைத் தொழுது ஒரு மந்திராலோசனை சபை கூட்டினன். பிறகு சிவாஜி தான் நேராக அப்சல்கானுடன் சண்டை போட முடியாதென்று துணிந்து தந்திரமாக அவனைக் கொல்லத் தீர்மானித்தான்.

அதன் பிறகு சிவாஜி அப்சல்கானிடம் ஒரு தூதனை அனுப்பினன். அவன் சென்று கானைக் கண்டு சிவாஜி சொல்லியபடியே பகர்ந்தான். அதாவது "அற்பனாகிய யான், மிக்க தீரரும் வீரருமான தங்களுடன் போர் புரிய இயலுமா? ஆதலால், யான் தங்களிடம்

அடைக்கலம் புகச் சித்தமாயிருக்கிறேன். உங்களை யான் நேரில் கண்டு உங்கள் பாதத்தில் விழத் தீர்மானித்தேனாதலால், தாங்கள் என்மேல் தயவு வைத்துத் தனிமையாக என்னைச் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்றான்; சந்திக்கும் இடத்தையும் காலத்தையும் குறிப்பிட்டான். அப்சல்கான் முதலில் கொஞ்சம் சந்தேகித்தானாயினும், பின்பு சிவாஜி தன் பெயரைக் கேட்டதும் பயந்து விட்டான் என்று நினைத்தான். அதன் பிறகு அவன் ஒருவாறு துணிந்து ஓர் உடைவாளுடன் சிவாஜி குறிப்பிட்ட இடத்தை நோக்கிச் சென்றான். போகும் பொழுது சிவாஜியை அப்பொழுதே தான் அடக்கி விட்டதாகத் தன் மனத்தில் களிகூர்ந்தான். சிவாஜியும், கானுக்கு முன்னதாகவே அங்குப் போய்க் காத்திருந்தான். அவன் கானைக் கண்டதும் மிக்க மரியாதையுடன் தலை வணங்கினான். அப்சல்கான் தனக்கு யாதாயினும் தீங்கு செய்வானென்று எண்ணிச் சிவாஜி வெண்மை நிறமுள்ள ஒரு மேல் அங்கியினுள் ஓர் இருப்புச் சங்கிலி அங்கியும் தலையில் ஒரு இரும்புச் சங்கிலிக் குல்லாயும் அதன் மேல் தலைப்பாகையும் தரித்திருந்தான். அவன் தன் இடக் கையில் பெயர் பெற்ற புலிநகம் அணிந்து வலக் கையில் ஒரு சிறிய கத்தியை வைத்திருந்தான். பழைய சரித்திராசிரியர்கள் சிவாஜியே முதலில் அப்சல்கானை எதிர்த்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இற்றை நாள் ஆசிரியர்கள் தக்க காரணங்களுடன் முதலில் அப்சல்கானே சிவாஜியைக் கொல்லத் தன் கத்தியை ஓங்கினதாகவும், உடனே சிவாஜி அவன்மேல் பாய்ந்து அவன் குடலைப் புலிநகத்தால் கீறிக் கொன்றதாகவும் சொல்லுகிறார்கள். அது எவ்வாறாயினுஞ் சரி; சிவாஜி

அப்சல்கானைக் கொன்றான். உடனே மராட்டிய சேனை விஜயபுரத்துச் சேனைமேல் பாய்ந்து அதைச் சின்னா பின்னப்படுத்தின.

பின்பு சிவாஜி வெற்றி முரசுடன் மீண்டான். சமரில் இறந்த போர் வீரர்களது குடும்பத்தின் பாது காப்புக்காக அவன் அவர்களுக்கு நிலம், முதலியவை அளித்தான். இதனால் மற்றப் போர் வீரர்கள் சிவாஜி யிடம் மிக்க அபிமானம் பாராட்டினார்கள்.

அப்சல்கான் இறந்த செய்தி விஜயபுரத்திற்கு எட் டியதும் அங்கு ஒரு பெரிய கிளர்ச்சி உண்டாயிற்று. உடனே அப்சல்கானுடைய மகன், பசில்கானும், சீடி ஜோகர் என்பவனும் ஒரு பெரிய சேனையுடன் சிவாஜி யிருந்த கோட்டையை நோக்கி வந்தார்கள். அஜாத சத்துருவும் அஞ்சா நெஞ்சனும், நிகரில்லா வீரனு மான அப்சல்கானே சிவாஜியைத் தோற்கடிக்கவோ, கைதியாக்கவோ முடியவில்லையெனின், இவர்கள் சிவா ஜிக்கு எம்மாத்திரம்? ஆதலால் இவர்கள் தோல்வி யுடன் விஜயபுரத்திற்குத் திரும்பினார்கள். அந்த அர சனும் சிவாஜியை வெல்ல முடியாமை கண்டு, அவனை ஒரு முடி மன்னனென ஒப்புக்கொண்டதல்லாமல், அவனுக்குக் கப்பமும் கட்டிவந்தான்.

பம்பாய் இராஜதானியின் மேற்கேயுள்ள ஜஞ்ஜிரா என்னுமிடத்தில் அபிசீனியர்கள் தங்களது கப்பற் படையின் வலியால் சமுத்திரக்கரையோரமிருந்த இராஜ்யங்களை அழித்து வந்தார்கள். ஆதலால் சிவாஜி கப்பல் செய்யுந் தொழிலில் திறமை வாய்ந்த அனேக மனிதர்களை வரவழைத்து, ஒரு பலமான கப்பற்படை தயாரித்தான். தன் இராஜ்யத்திலுள்ள துறைமுகங்க

ளாகிய 'சுவர்ணதுர்க்கம், விஜயதுர்க்கம் முதலிய இடங்களில் பத்துலக்ஷம் ரூபாய்கள் செலவழித்துக் கோட்டைகள் கட்டினன். அப்பொழுது போர்த்துக்கேசியர்கள் பம்பாய் இராஜதானியின் மேற்குக் கரையிலுள்ள கோவாவை முக்கிய வியாபாரஸ்தலமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சிவாஜியினுடைய வலிவைக்கண்டு அவனுடன் நட்புப் பாராட்டினர்கள்.

சிவாஜி மேன்மேலும் வெற்றி யடைந்து, கடைசியில் மொகலாய இராஜ்யத்தையே தாக்க ஆரம்பித்தான். அதுகண்ட ஔரங்கசீப் சக்கரவர்த்தி தன் மாமனை ஷைஸ்டாகானைத் தக்ஷிணத்திற்கனுப்பி சிவாஜியை எவ்வாருவது சிறை செய்யச் சொன்னன். ஷைஸ்டாகான் அவ்வாறே சென்று சில கோட்டைகளையும் பிடித்தான். எனினும், மராட்டியர்களை அறவே தோற்கடிக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் ஒரு பொழுதும் நேராகச் சண்டை செய்வதேயில்லை. * கொரில்லா யுத்தமே புரிந்து வந்தார்கள். ஆதலால், ஷைஸ்டாகானல் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. இறுதியில் அவன் புனு நகரம் சென்று தங்கி, மராட்டியர்கள் அந் நகரினுள் பிரவேசிக்காவண்ணம் காவலாளிகளை வைத்தான். ஆயினும் ஒருநாள் சிவாஜியும் அவனது துணைவர்களும் ஒரு கலியாணக் கூட்டத்துடன் கலந்து புனு சேர்ந்தார்கள். அன்று நள்ளிரவில் அவர்கள் ஷைஸ்டாகான் அரண்மனையினுள் புகுந்து, அந்தப்புரம் சென்று அவனைத் தாக்கினர்கள். ஷைஸ்டகான் உள் வந்தவர்கள் யாவரென, கணப்பொழுதிலறிந்து பக்கலிலுள்ள ஜன்னல் வழியே தப்பி யோடும்

* கொரில்லா யுத்தம் என்ருல், திடீரென்று மறைவிலிருந்து எதிரியை எதிர்த்து ஓடச்செய்து அக்கணமே மறைதல்.

பொழுது, அவனது கைவிரல்களில் ஒன்றைச் சிவாஜி தனது வாளால் துணித்தான். சிவாஜி இவ்விதமாகப் புனைவைக் கைப்பற்றிக் கொண்டு ஸூரத் நகரை எதிர்த்துக் கொள்ளையடித்தான். ஆயினும் அங்கு வர்த்தகம் செய்து வந்த ஆங்கிலேயர்களால் துரத்தப் பட்டான்.

ஷைஸ்டாகான் டில்லி திரும்பி, ஔரங்கசீப்பிடம் சிவாஜியின் தந்திரத்தையும் ஆண்மையையும் பற்றி உரைத்து அவனுடன் சமாதானம் செய்து கொள்ளும் படி எவ்வளவோ சொல்லியும், ஔரங்கசீப் அவைக ளுக்குச் செவிகொடாமல், ராஜாஜெயசிங்கன் என்னும் ரஜபுத்திர வீரனைச் சிவாஜியை அடக்க அனுப்பினன். ஜெயசிங்கனும் பெரிய வீரனுதலால், சிவாஜியினுடைய அனேக கோட்டைகளைப் பிடித்துக் கொண்டான். சிவாஜி அவன் முன் நிற்கக் கூடவில்லை. ஆதலால் புரந்தரம் என்னுமிடத்தில் சிவாஜி ஜெயசிங்குடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி சிவாஜி ஒரு தலைவனுக ஒப்புக்கொள்ளப் பட்டான். அவன் மொகலாயர்களிடமிருந்து ஜயித்த கோட்டை களை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தான். பின் சிவாஜியுடன் நட்புக் கொள்ளுவதற்காக ஔரங்கசீப் அவனை ஆக்ராவுக்கு வர வேண்டினன்.

அவ்வாறே, சிவாஜி கி. பி. 1666-ல் தன் உறவினர் களும் நண்பர்களும் ஆசி கூற அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு ஆக்ராவை அடைந்தான். தன்னை ஒரு அரசனுக மதித்து ஔரங்கசீப் மரியாதை செய்வானென்று நம்பினன். ஆனல் உண்மையில் ஔரங்கசீப் சிவாஜியினிடம் மிக்க அருவருப்பும் பொரு

மையுமே கொண்டிருந்தான். ஆதலால் அவன் சிவாஜியை நன்மொழி கூறி வரவேற்காமல் மிகவும் அலட்சியமாகச் சாதாரண உத்தியோகஸ்தர்கள் வீற்றிருக்குமிடத்தில் இருக்கச் செய்தான். அதைக் கண்டு சிவாஜி மனம் புண்ணாகி வெகுளி மேற்கொண்டு தனது மகாராஷ்டிர பாஷையில் ஔரங்கசீப்பைப் பலவாறு தூஷித்துத் திரும்பத் தன்னூர் செல்ல யத்தனித்தான். ஆனால், எவ்வளவோ காலமாக முயற்சித்தும் அடக்கக் கூடாத சிவாஜி தன்னிடம் அகப்பட்டிருக்கும் அத்தருணத்தை ஔரங்கசீப் கைவிடுவானோ? விடான் அல்லவா? ஆதலால் அவன் உடனே சில போர்வீரர்களை ஏவி சிவாஜியைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையில் போட்டான். அங்கு உருவிய கத்தியுடன் போர் வீரர்கள் இரவும் பகலும் காவல் புரிந்து வந்தார்கள்.

இப்படிச் சிவாஜிக்கு எதிர்பாராத தீங்கு நேரிட்டாலும், அவன் தைரியத்தைக் கைவிடாமல் தப்புவதற்குத் தன் மனதில் அனேக சூழ்ச்சிகள் செய்து வந்தான். கடைசியில் தான் அசௌக்கியமாக விருப்பதாக நடித்து, அதற்காகப் பழங்கள், பணியாரங்கள் முதலியவை தானம் செய்ய அனுமதி பெற்றுக்கொண்டு தினந்தோறும் அனேக பெரிய கூடைகள் நிறைய பழங்களும் பணியாரங்களும் வெளியே அனுப்பினான். இவ்விதமாகப் பெரிய கூடைகளை வெளியே கொண்டு போவதும் உள்ளே கொண்டு வருவதும் வழக்கமாக ஆயின. காவலர்கள் கூடைகளைப் பற்றி அதிகமாக விசாரிப்பதையும், அவைகளைப் பரிசோதிப்பதையும் விட்டுவிட்டார்கள். இது இங்ஙனமாக ஒரு நாள் சிவாஜி தன் நண்பர்களைக் கூடை தூக்குவோராக வரச்சொல்லித் தானே ஒரு கூடையில் உட்கார்ந்து

கொண்டு வெளியேறினன். காவலர்களும் அது ஒரு பழக் கூடையென்று வாளா இருந்தனர். பின்பு சிவாஜி ஒரு சோலையை அடைந்து, தலைமயிர், மீசை, தாடி எல்லாவற்றையும் க்ஷவரம் செய்துகொண்டு உடல் நிறையச் சாம்பல் பூசிக்கொண்டு ஒரு பரதேசி போல் வேடம் பூண்டு அதிக ஜன நட மாட்டமில்லாத ரஸ்தா வழியே சென்று இராஜக்கிரஹமாகிய தன் மாளிகையை அடைந்தான்.

இது இங்ஙனமாக ஆக்ராவில் சிவாஜி தப்பியோடிய செய்தி ஔரங்கசீப் காதில் விழவே அவன் இடியோசை கேட்ட அரவம்போலாயினன். உடனே அவன் பல குதிரை வீரர்களை நாலா பக்கமும் அனுப்பினன். நகர முழுதும் ஒவ்வொரு வீட்டையும் சோலையையும் தேட ஆட்களை அனுப்பினன். ஆயினும் சிவாஜியைப் பிடிக்கக்கூட வில்லை. கடைசியில் சிவாஜி தன் இருப்பிடம் சுகமே அடைந்ததைச் செவியுற்று ஔரங்கசீப் துயரத்தில் மூழ்கினன். சிவாஜி ஆக்ரா போந்த பொழுது அவனுடன் ஔரங்கசீப் நட்புப் பூண்டிருந்தால் மொகலாய இராஜ்யம் எவ்வளவோ மேன்மையடைந்திருக்கக் கூடும். ஆனல் ஔரங்கசீப் அப்படிச் செய்யாமல் சிவாஜியைத் தனக்கு ஒரு பெரிய விரோதியாகச் செய்து கொண்டான். சிவாஜியைச் சிறுமைப் படுத்தியதை மகாராஷ்டிரத்திலுள்ள ஜனங்கள் அனைவரும் தங்களையே அவமதித்ததாகப் பாவித்து ஔரங்கசீப்புடன் பகைமை பூண்டார்கள். மொகலாய இராஜ்யம் க்ஷீணித்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஔரங்கசீப் மறுபடியும் சிவாஜியை எதிர்க்க ஒரு சேனையை அனுப்பினன். ஆனல் சிவாஜி அதைச்

சின்னாபின்னப்படுத்தி வெருட்டியடித்தான். அதனால் ஔரங்கசீப் மறுபடியும் அவனுடன் சாமாதனம் செய்து கொள்ளப் பிரயத்தனப்பட்டான். ஆனால் சிவாஜி மறுத்துவிட்டு, மொகலாய இராஜ்யத்தைத் தாக்க ஆரம்பித்தான். சிவாஜி செய்யும் இன்னல்களைப் பொறுக்கக் கூடாமையால் கடைசியில் ஔரங்கசீப் அவனை ஒரு முடிமன்னனாக ஒப்புக்கொண்டான்.

பிறகு விஜயபுரம், கோல்கொண்டா சுல்தான்களை மறுபடியும் தோற்கடித்துத் தனக்கு அவர்கள் கப்பங் கட்டுமாறு செய்தான். கி. பி. 1674-ல் சிவாஜி மத்திய இந்தியா முழுமையும் ஒரு குடை கீழ் ஆண்டான். அதே வருடத்தில் அவன் $1\frac{1}{2}$ கோடி ரூபாய்கள் செலவிட்டுச் சக்கரவர்த்தியென மகுடாபிஷேகம் செய்து கொண்டான்.

சிவாஜியின் அரசாட்சி :— அரசாங்க விஷயங்கள் எல்லாவற்றையும் ஒருவனே அவ்வளவு திறமையாகக் கவனித்தல் முடியாது. ஆதலால் ஒவ்வொரு இலாகாவை மேற்பார்வையிட ஒவ்வொரு மந்திரியை ஏற்படுத்தி அதற்கு மேல் அரசன் கவனிப்பதே அரசியலின் திறனும்.

ஆங்கில அரசாட்சியிலும் அம்மாதிரியே அரசாங்க விஷயங்களை அனேக பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு மந்திரியினது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கிறார்கள். அதுபோலவே சிவாஜியும் அஷ்டப்ரதான் என வழங்கப்பட்ட எட்டு மந்திரிகளின் வசம் தன் அரசாங்கத்தை ஒப்புவித்தான். (1) அவர்களில் முதன்மையானவன் பிரதான

மந்திரி அல்லது பீஷ்வா. அரசனுக்கு அடுத்தாற் போல் அவனே இராஜ்யபாரத்தைத் தாங்கி வந்தான். (2) சேனுதிபதி-இவன் இராணுவ இலாகாவின் தலைவன். போர்ச் செயல்களைக் கவனித்துப் போரை நடத்தி எப்பொழுதும் போருக்குரிய சாதனங்களைத் திரட்டித் தயாராக வைத்திருக்க வேண்டியது அவன் கடமை. (3) முசும்தார் அல்லது பொக்கிஷத் தலைவர். (4) அரசாங்க பத்திரங்களைப் பதனப்படுத்தி வைக்கும் காரியதரிசி அல்லது அமைச்சன். தர்பாருக்கு வந்த கடிதங்களோ, அல்லது அங்கிருந்து அனுப்பப் பட்ட கடிதங்களின் நகலோ அவனிடமே இருந்தன. (5) அரசனது அந்தரங்கக் காரியதரிசி — இவன் அரசனது குடும்ப விஷயங்களைக் கவனித்தும், அவருடைய சொந்த கடிதங்களைப் பதனப்படுத்தியும் வந்தான். (6) அயல் நாட்டுக் காரியங்களைக் கவனிக்கும் வெளி நாட்டு மந்திரி—இவன் பக்கத்திலுள்ள தேயங்களின் அரசர்களுடன் கடிதப் போக்கு வரவு செய்வதோ, அல்லது அரசாங்க விஷயமாகத் தூதனை அனுப்புவதோ இவைகளெல்லாம் செய்து வந்தான். (7) நியாயசாஸ்திரி அல்லது பண்டிதராயர்—இவர் மத விஷயமாக புத்திமதிகள் சொல்லிக்கொண்டும், அரச குருவாயுமிருந்தார். (8) முதல் நியாயாதிபதி. ஆக எண்மரிருந்தனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் அநேக சிப்பந்திகளும் குமாஸ்தாக்களும் இருந்தனர்.

அரசியல் செவ்வனே நடாத்துவதற்காக, இராஜ்யத்தை அநேக சுபாக்கள் அல்லது மாகாணங்களாகவும், ஒவ்வொரு சுபா அல்லது மாகாணத்தை அநேக பிராந்தியங்களாகவும், ஒவ்வொரு பிராந்தியத்தை

அனேக மஹால்களாகவும், கிராமங்களாகவும் சிவாஜி வகுத்திருந்தான்.

போர் வீரர்கள் சண்டை செய்யப் போகும் பொழுது, மோகலாயர்கள் தங்களுடன் பெண்களையும் அழைத்துச் செல்வது வழக்கம் அதனால் அனேக கஷ்டங்கள் நேர்ந்தன. ஆதலால் சிவாஜி, போர்வீரர்களுடன் பெண்கள் செல்லக்கூடாது எனக் கண்டிப்பாக உத்தர வளித்தான். போரில் உயிர் துறந்த வீரர்களுடைய குடும்பங்களின் சம்ரக்ஷணை அரசாங்கத்தால் செய்யப்பட்டது. யுத்தத்தில் அந்தணர்களையும் மகளிர்களையும், பசுக்களையும் எவ்வித துன்பத்திற்கும் உள்ளாக்க லாகாது என அவன் விதித்திருந்தான். உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டதே யொழிய ஜாகீர் விடப்படவில்லை. ஏனெனில், ஜாகீர் கொடுத்தால் அவர்கள் மிக்க பலம்கொண்டு அரசனையே எதிர்ப்பார்கள் என்பது மொகலாய இராஜ்யத்தின் சரித்திரத்திலிருந்தும் ஐரோப்பாவில் பிரான்சு முதலிய தேயங்களின் சரித்திரங்களி லிருந்தும் நன்கு தெரிய வருகின்றது. ஆதலால் சிவாஜி ஜாகீர் விடாமை அவனுடைய புத்தி நுட்பத்தை நன்கு தெரிவிக்கிறது. சிவாஜி இந்து கோயில்களுக்கும், மகம்மதியரது மசூதிகளுக்கும் பொருள் நிலம் முதலியவை உதவிசெய்து அவைகளைச் சரிவர உபயோகிக்க ஏற்பாடு செய்தான். இதனால், சிவாஜி இந்துவாயினும் மதத் துவேஷம் அவனுக்கில்லை யென்று தெரிகிறது.

சிவாஜி சோம்பலில்லால் தேயத்தை முன்னேற்றத்துக்குக் கொண்டுவர உழைத்தான். அவன் எப்பொழுதும் தேயம் முழுதும் சுற்றி ஜனங்களின் சுகத்

தைக் கவனிப்பதிலேயே அவனுடைய கடைசிநாளேச் செலவிட்டான். அவன் சாப்பிடவும் நேரமில்லாமல் குதிரைச் சவாரி செய்யும்பொழுதே உண்பான் என, சரித்திரக்காரர்கள் எழுதுகிறார்கள்.

மரணம் :— சிவாஜி, ஓய்வில்லாமல் எந்நேரமும் வேலை செய்துகொண்டு வந்ததால் அவனுக்கு அடிக்கடி மார்பு நோய் உண்டாயிற்று. அப்பொழுதும் அதாவது கி. பி. 1676 லிருந்து 1678 வரையில் தென்னிந்தியாவின் மேல் படையெடுத்து வெல்லூர், செஞ்சிக் கோட்டை முதலிய கோட்டைகளைப் பிடித்துத் தன் சகோதரன் வெங்காஜியைத் தஞ்சையை நன்ருக ஆளச் செய்து இராஜக்கிரஹம் திரும்பினுன். பிறகு தேக அசௌக்கியம் அதிகமாகவே அவன் இனித் தன் வாழ் நாள் முடிந்தது எனக் கண்டு, அந்தணர்களுக்கும் ஏழைகளுக்கும் தானதர்மம் செய்து கழுத்தில் துளசி மாலை தரித்து, பண்டிதர்கள் வேதசாஸ்திர பாராயணங்கள் செய்யக் கேட்டுக்கொண் டிருந்தான். கடைசியாக கி. பி. 1680-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 5-ம் தேதி அவன் 'ஹரஹரசிவா' என்னும் கடவுள் நாமத்தை உரைத்துக் கொண்டு இவ் வுலக வாழ்க்கையை நீத்தான்.

## சிவாஜியின் குணுதிசயங்கள்.

சிவாஜியின் எண்ணம் தன் தாய் நாடாகிய மகா ராஷ்டிரத்தை மகம்மதியாது ஆதிக்கத்தினின்று விடுவித்துத் தங்களது ஆட்சிக்குள் கொண்டுவர வேண்டுமென்பதே. அதைத் தன் ஆயுள் முடிவிற்குள் நிறைவேற்றினுன். தன் நாட்டில் தர்மம் தழைத்தோங்கச் செய்தான். எக்காரியம் செய்வதிலும் அவனுக்குத்

துணிவும் ஊக்கமும் புத்திசாலித் தன்மையும் உண்டு. தன் உத்தியோகஸ்தர்களிடம் பிரியமாக நடந்து கொண்டான். "மூனை வீமனுடல் பாதி மிருகந்தனக் கென்று முன் தருமர் சொன்னதிலேயோ" என்ற பாண்டவரின் மூத்தோன் தருமனைப்போல், சிவாஜி பக்ஷபாத மில்லாமல் நடந்து கொண்டான்; அவரவர்களது சாமர்த்தியத்திற்கும் வன்மைக்கும் தக்கபடி உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்தான். அவன் அரசாங்கத்தில் எக்காரியத்தைச் செய்ய எண்ணினாலும், தன் மந்திரிமார்களையும் மற்றுமுள்ள கற்றோர்களையும் கலந்து கொண்டே செய்வான். அவர்களுடைய ஆலோசனைக்கு மாறுகச் செய்யான்; தன்னிடம் ஏதாவது தப்பிருந்தால் சொல்லும்படி அவர்களை வற்புறுத்துவான். அவர்கள் அவனது செய்கைகளில் யாதாயினும் ஒன்றைக் கண்டித்தால், அவன் அவர்களைக் கோபிக்காமல், உடனே அதைத் திருத்திக் கொள்வான். அவன் சோம்பலில்லாமல் எப்பொழுதும் வேலை செய்ததால், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அவ்வாறே நடக்க அது ஒரு தூண்டுகோலாக இருந்தது. சிவாஜி ஒரு பெரிய செங்கோலான். உன்னிய கருமத்தைச் செய்யவல்ல தீரன். பெரியோரிடமும் கடவுளிடமும் வணக்கமுள்ளவன். ராமதாஸ் சுவாமியே அவனுடைய குருவாக விளங்கினர். அவர் சொல்லிய வண்ணமே அவன் மதவிஷயங்களில் மாத்திரமல்லாமல் அரசாங்க விஷயங்களிலும் நடந்து வந்தான். சிவாஜி எல்லா மன்னர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்கினன்.

# 7. ரஞ்சித் சிங்கன்

ரஞ்சித் சிங்கன் பஞ்சாபிலுள்ள சீக்கிய வம்சத்தைச் சேர்ந்த சர்தார் மோஹன சிங்கனுடைய புதல்வன். அந்நாளில் பஞ்சாப் தேயம் அனேக சிறு ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு சிற்றரசன் அரசு புரிந்து வந்தான். அச் சிற்றரசர்கள் எப்பொழுதும் ஒருவரோடொருவர் சண்டை செய்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவனும், மற்றொருவனுடைய நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான். நாட்டில் அமைதியுமில்லை, ஒற்றுமையுமில்லை; சீக்கியர்கள் போர் செய்யுந் தொழிலையே மேற்கொண்டவர். ஆதலால், அவர்களுக்குச் சண்டை செய்வதே காலம் போக்கும் வழியாக விருந்தது. ரஞ்சித்சிங்கனது தகப்பன் மோகன சிங்கன் ஒரு பெரிய போர்வீரன். அவன் தன்னுடைய பிரதேசத்திற்குப் பக்கலிலுள்ள நாடுகளைக் கைப்பற்றுவதிலேயே, தன் ஆயுள் முழுமையும் கழித்தான். ஆனால் பஞ்சாப் முழுமையும் தனக்குள்ளாக்கி, நாட்டில் ஒற்றுமையும் உண்டாக்கி, ஓரரசன் கீழ் ஒரே நாடாகச் செய்தவன் ரஞ்சித் சிங்கனே. போர் வீரத்திலும், ஜெயத்திலும், கீர்த்தியிலும் பஞ்சாப் சிங்கமாகிய அவனுக்குச் சமானமாக, பிரான்சு தேயத்தில் போர் வீரனாகவும், சக்கரவர்த்தியாகவும் விளங்கின நெப்போலியனைத்தான் கூறலாம். ஐரோப்பா முழுவதும் நெப்போலியன் பெயரைக் கேட்டதும நடுங்கியதுபோல, வட இந்தியா முழுதும், ரஞ்சித் சிங்கனது பெயரைக் கேட்டதும் நடுங்கிற்று.

பஞ்சாபில் இன்றைக்கும் ரஞ்சித் சிங்கனுடைய பெயர் ஒவ்வொரு வீட்டிலும் வழங்கப்பட்டு வருகிறது.



ரஞ்சித் சிங்கன்

அவனது உருவப் படம் இல்லாத வீடில்லை. ரஞ்சித் சிங்கன் ஆண்டபொழுது இந்தியாவிற்கு வந்த ஒரு ஜர்மன் பிரபு அவனது தோற்றத்தைப் பார்த்துக் கீழ் வருமாறு கூறினர். "ரஞ்சிதசிங்கன் சாதாரணமனிதர் களைக் காட்டிலும் கொஞ்சம் குட்டையாக விருந்தான். அவனது ஒரு கண் பார்வையில்லாம லிருந்தது. மற் றொரு கண்ணின்விழி மிக்க பிரகாசத்துடன் சுற்றிக் கொண்டே யிருந்தது. அவனுடைய முகம் அம்மை வடுக்களால் விகாரப் பட்டிருந்தது. நீண்டு திரண்ட புயங்களும், அகன்ற மார்பும், அவனது தேகவலிவைக் காட்டின. அவனுடைய சரீரம் கொஞ்சம் கருமை யாகவே யிருந்தது."

அவன் பார்வைக்கு அவலட்சணமாக விருந்தா லும் அவனுடைய பராக்கிரமம் எளிதாய்ச் சொல்லக் கூடாமலிருந்தது. அவன் போர்க் களத்தில் பின் வாங்காமல் அஞ்சா நெஞ்சுடன் சமர்செய்யும் சுத்த வீரன். கத்திச் சண்டையில் நிகரற்றவன். குதிரைச் சவாரியில் மிகவும் தேர்ந்தவன். நாள் முழுதும் குதிரைச்சவாரி செய்து கொண்டிருந்தாலும் அவனுக் குக் களைப்புக் கொஞ்சமும் உண்டாவதில்லை. எல்லா இலக்கணங்களும் பொருந்திய நல்ல ஜாதிக்குதிரைகள் சேர்ப்பதில் அவனுக்கு விருப்பம் அதிகம் உண்டு. அவனுடைய லாயத்தில் அரபிதேயம், பாரசீகம், பெகு முதலிய அனேக விடங்களிலிருந்து திரட்டப் பட்ட சிறந்த குதிரைகள் இருந்தன. அவன் தனக்கு ஒரு வஸ்து வேண்டுமென்று நினைத்தால் அதை அடை வதில் எவ்வளவு கஷ்டம் உண்டானாலும், லக்ஷியம் செய்யாமல், தன் கோரிக்கையை நிறைவேற்றும்

ஆற்றல் உடையான். இதற்கு உதாரணமாகக் கீழ் வரும் விஷயம் தெரிவிக்கிறது.

பிஷாவர் என்று சொல்லப்பட்ட புருஷபுரத்தை யாண்டுவந்த ஒரு சிற்றரசனிடம் லைலி என்ற ஒரு குதிரை இருந்தது. அது அழகும் கீர்த்தியும் வாய்ந்தது. அதை ரஞ்சித்சிங்கன் தனக்குக் கொடுக்கும் படியாகவும் அதற்குப் பதிலாக எது வேண்டுமானாலும் தான் கொடுப்பதாகவும் சொன்னான். ஆயினும் அச் சிற்றரசன் அதற்குச் சம்மதித்தானில்லை. உடனே ரஞ்சித்சிங்கன் ஒரு பெரிய சேனையை யனுப்பினான். அச் சிற்றரசனை அவர்கள் தோற்கடித்தாலும், அக் குதிரையை அவர்கள் அடையக் கூடவில்லை. எங்குத் தேடினாலும் குதிரை கிடைக்கவில்லை. அச் சிற்றரசனை எவ்வளவு துன்பப் படுத்தினாலும், தண்டித்தாலும், அக் குதிரையைப் பற்றிய விஷயம் அவன் சொல்ல மறுத்து விட்டான். குதிரை இறந்து போனதாகத் திடீரென ஒரு வதந்தி கிளம்பவே, ரஞ்சித்சிங்கனுடைய சேனை லாகூருக்குத் திரும்பிற்று. கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அவ்வதந்தி பொய்யென்றும் உண்மையாக அக் குதிரை புருஷபுரத்திலேயே இருப்பதாகவும் கேள்வியுற்று, மறுபடியும் ரஞ்சித்சிங்கன் ஒரு சேனையைத் திரட்டி யனுப்பினான். புருஷபுரத்தைக் கைப்பற்றியும் குதிரையைக் காணமுடியவில்லை. இத் தடவையும் ரஞ்சிதசிங்கனது எண்ணம் கைகூடவில்லை. "ஊக்கமது கைவிடேல்" என்றபடி, மறுபடியும் ஒரு படையை யனுப்பி அவ்வரசனைப் பிடித்துக் காவலில் வைத்து மிகவும் கஷ்டப் படுத்திய பிறகே அவன் அக்குதிரையை ரஞ்சித்சிங்கனிடம் கொடுக்க உடன்பட்டான். அக்

குதிரையைப் பெற்றவுடன் ரஞ்சித்சிங்கனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. அக் குதிரைக்கு விலை யுயர்ந்த ஆபரணங்களைப் பூட்டிக் கால்களில் தங்கவளைபோட்டு, அதை ஊர்வலங்கொண்டு தன் அரண்மனை சேர்த்தான். அக் குதிரையை அவன் அடையச் செலவழித்தது 60 லக்ஷம் ரூபாய்கள்! அந்தப் போரில் 12,000 மனிதர்கள் உயிர் துறந்தார்கள்!

அதிக டம்பமில்லாமல் வெண்பட்டிலோ அல்லது மஞ்சளிலோ அவன் மெல்லிய உடைதரிப்பது வழக்கம். ஆனால் அவனிடம் சில கெட்ட வழக்கங்கள் இருந்தன. அவை சுயநலம் பாராட்டுவதும், பேராசையும், கட்குடியும் அயல் மாதர்களை விரும்புதலும் ஆகியவைகளே. மற்ற விஷயங்களில் அவன் மிகவும் மெச்சத் தகுந்தவன். அவன் மிக்க புத்தி நுட்பம் உள்ளவன். தன்னைக் கண்டதும் அனைவரும் மரியாதை செய்யுமாறு அவன் எல்லாரிடமும் நடந்து கொண்டான். ஆங்கிலேயருடன் ஸட்லிஜ் நதிக்கப்பாலுள்ள பிரதேசத்துக்காகச் சண்டை யிட்டபொழுது, அவர்களது பலத்தையும் சௌரியத்தையுங் கண்டு, அது முதல் அவருடன் கட்டுப் பூண்டு உடன் படிக்கை செய்துகொண்டான்.

அவன் தன் அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் மிகச் சமர்த்தன். ஒருவனைப் பார்த்தாலும் அவன் எப்படிப் பட்டவனென்றும் எக்காரியம் செய்யத் தகுதி யுள்ளவனென்றும் மிகச் சுலபமாக அறியும் சக்தி அவனிடம் உண்டு. எவனொருவன் ஒழுங்காகவும் ராஜபக்தியுடனும் வேலை செய்து வந்தானோ அவனுக்கு அனேக உபகாரங்கள் செய்து ஏராளமான வரும்படியும் கொடுத்தான்.

எவனாயினும் ஒருவன் தன் தேயத்தில் மிக்க செல்வமும் பராக்கிரமமும் உடையவனாக இருந்தால் அவனை உடனே யடக்கி அவனது செல்வத்தையும் நிலத்தையும் பிடுங்கிக் கொள்வான். ஏனெனில் ஒருகால் அவர்கள் தன்னையே எதிர்த்து விடுவார்களோவென்று, அவன் பயந்து அவ்வாறு செய்துவந்தான்.

ரஞ்சித்சிங்கன் சிங்காதன மேறின கொஞ்ச நாட்களுக்கெல்லாம் தன் இராஜ்யத்தின் பக்கத்திலுள்ள சிற்றரசர்களை வென்று அவர்களது இராஜ்யங்களைக் கைப்பற்றிக் கொண்டான். தவிர அமிர்தசரஸ், மூல்தான் முதலிய நகரங்களையும் பிடித்துக் கொண்டான். இவ்வாறு பஞ்சாப் முழுமையும் தன் குடைக் கீழ் கொண்டு வந்த பிறகு மகம்மதியர்களிட மிருந்த காஷ்மீரத்தையும் தன்வயப் படுத்திக் கொண்டான்.

அவன் மிக்க பேராசையுள்ளவனென்பது, கீழ் வரும் இருவிஷயங்களால் நன்கு தெரிகின்றது. ஒரு கனவான் வீட்டில் திருமணம் ஒன்று வெகு விமரிசையாக நடந்தது. அப்பொழுது பெண்ணின் தாய், தன் மகளுக்கு ஸ்திரீதனமாக இரண்டு கூடைகள் நிறையப் பொன்னும் வெள்ளியுங் கொடுத்ததாகப் பெருமை பேசிக் கொண்டாள். அச் சொற்கள் ரஞ்சித்சிங்கன் காதில் விழுந்ததும், " கலியாணத்திற்கு அவ்வளவு அதிகமாகப் பொருள் செலவழித்தவள் அரசாங்கத்திற்கும 50 000 ரூபாய்கள் எளிதாகக் கொடுக்கலாம்" என்று கூறி அத்தொகையை வாங்கிக் கொண்டான்

இரண்டாவது விஷயம் பெயர் பெற்ற கோஹினூர் வைரத்தின் சரிதையே. கோஹினூர் வைரம் பண்டைக் காலத்தில் பாரதவீரர்களான பாண்டவர்கள் வைத்

திருந்ததாகப் புராணகதைகள் கூறும். ஆனால் பிற் காலத்தில் அது கோல் கொண்டாவில் கிடைத்தது. பின்பு பதினேழாம் நூற்றாண்டில் மோகலாய சக்கர வர்த்தியாக விருந்த ஷாஜஹான் அவ்வைரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். பிறகு அது அவனது சந்ததி யார்களிடமே யிருந்தது. கடைசியாக நாதர்ஷா இந்தி யாவின் மேல் படையெடுத்து டில்லியை யழித்த பொழுது, அவ்வைரத்தைட் டில்லியில் ஆண்ட மோக லாய அரசன் மகம்மதுஷாவிட மிருந்து பிடுங்கிக் கொண்டான். சில வருடங்களுக்குப் பிறகு நாதர்ஷா இறந்த பொழுது அவன் பின் வந்தோனான ஆமத்ஷா அப்தாலி அவ் வைரத்தை வைத்திருந்தான். பிறகு அவ்வைரம் அவனது சந்ததியாரிடமே மாறி மாறி இருந்தது. கடைசியில் அது ஆப்கானிஸ்தானத்தை யாண்ட ஷாஷுஜாவிட மிருந்தது. சிறிது காலங் கழித்த பிறகு ஷாஷுஜாவை டோஸ்டு முகம்மது என்பவன் ஆப்கனிஸ் தானத்திலிருந்து துரத்தித் தான் சிங்காதன மேறினான். அப்பொழுது ஷாஷுஜா பஞ்சாப் வந்தடைந்தான். அக்காலே ரஞ்சித்சிங்கன் மிக்க உபசாரத்துடன் அவனையும் அவன் குடும்பத்தை யும் வரவேற்றான். ஒரு பெரிய மாளிகையை அவர்கள் வசிக்க ஏற்பாடு செய்தான். ரஞ்சித்சிங்கன் ஷாவிற்குத் தன் நாட்டில் இடங்கொடுத்ததற்கு முக்கிய காரணம், அவனிடமிருந்த கோஹினூர் வைரத்தை அபகரிக்க வேண்டியே யொழிய வேறில்லை. ஷாஷுஜா பஞ்சாப் வந்தடைந்து கொஞ்சநாட்களான பிறகு, ரஞ்சித் சிங்கன் ஒரு நாள் ஒரு வேலையாளை ஷாவினிடம் அனுப்பி அவன் வைத்திருக்கும் வைரத்தைக் கொடுத் தனுப்பச் சொன்னான். ஷாஷுஜா அவ்வைரத்தி

ணருமை தெரிந்தவனுதலால், அவன் "அவ்வைரம் தற் சமயம் என்னிடம் இல்லை. யான் ஆப்கானிஸ்தானத்தை விட்டு இங்கு வருகையில் எனது உயிர்ச் சிநேகனை ஒரு வியாபாரியிடம் கொடுத்துப் பதனப்படுத்தி வந்தேன், ஆகையால் தங்களுடைய வேண்டுகோள்படி செய்ய முடியாமைபற்றி மிகவும் விசனிக்கின்றேன்" என்று சொல்லி யனுப்பினுன். ஆனல் ரஞ்சித்சிங்கனே ஷாஷுஜாவின் வார்த்தைகள் முழுப்பொய்யென்றும் அவ்வளவு பெயர் பெற்ற வைரத்தை எவரும் பிறரிடம் கொடுக்க மாட்டார்க ளென்றும் எண்ணினுன். எப்படி யாவது தான் அவ் வைரத்தை அடையவேண்டுமென்று, சாம தான பேத தண்டம் முதலிய நால்வகை வழிகளையும் உபயோகிக்கத் துணிந்தான். ஆதலால் மறுபடியும் தன் பணியாளனை ஷாஷுஜாவினிடம் அனுப்பி அவன் சொல்லியனுப்பிய வார்த்தைகள் உண்மையல்ல வென்று தனக்குத் தெரியுமென்றும், தன்னை ஏமாற்ற அவனுல் முடியா தென்றும், அவ் வைரத்தைத் தன்னிடம் சீக்கிரம் ஒப்புவிக்காவிட்டால் அதனுல் அவனுக்கும் அவனது குடும்பத்திற்கு முண்டாகும் தீங்கைத்தான் முன்னுலேயே எச்சரிப்பதாகவும் பயமுறுத்தினுன். ஆனல் ஷாஷுஜாவோ ரஞ்சித்சிங்கன் பன்முறை ஆளையனுப்பினுலும் முன் சொன்ன வார்த்தைகளையே திரும்பித் திரும்பிப் பகர்ந்தான். கடைசியில் ரஞ்சித்சிங்கன் வெகுளி மேற்கொண்டு, ஷாவின் வீட்டைச் சுற்றிக் காவல் வைத்து எவரும் உள்ளிருந்து வெளியிற் செல்லவாவது, வெளியிலிருந்து உட்செல்லவாவது முடியாமற் செய்தான்; உணவு கூட சரியாக அனுப்பு வதில்லை. தன் நண்பர்களும் வேலையாட்களும் பெண்சாதி பிள்ளைகளும் பசியால் வாடிக்

கஷ்டப் படுவதைப் பார்த்து மனஞ்சகியாமல் ஷாஷூ ஜா ரஞ்சித்சிங்கனுக்கு அவ்வைரத்தை யளிப்பதாகச் சொல்லியனுப்பினன். மறுநாள் அதிகாலையே ரஞ்சித் சிங்கன் மிக்க ஆவலுடன் ஷாவின் மாளிகைக்குப் போந்தான். ஷாவை "வைரம் எங்கே? சீக்கிரம் கொண்டு வரச்சொல்" என, அவன் ஒரு வேலைக் காரனைக் கோஹினூர் வைரத்தைக்கொண்டு வரக் கட்டளையிட்டான். அவன் அவ்வாறே சென்று ஒரு சிறிய வெல்வெட் துணி முடிச்சைக் கொண்டு வந்து ஷாவினிடங் கொடுத்தான். ஷா, அதை ரஞ்சித்சிங்கனிடம் கொடுத்தான். ரஞ்சித்சிங்கன் அதை வாங்கி முடிச்சை அவிழ்த்துப் பார்த்துத் தான் வெகு நாளாக அடைய ஆவல் கொண்ட வைரம் இதுவே எனக்கண்டு, பிறவிக் குருடன் திடீரெனக் கண்பார்வை யடைந்தால் எவ்வளவு களிப்படைவானே அவ்வளவு களிப்பெய்தினன். உடனே அவன் எழுந்து ஷாவுக்கு வந்தனம் செய்யாமலும் அவனிடம் விடைபெற்றுக் கொள்ளாமலும் திடீரெனத் தன் அரண்மனை சென்றான்; அதோடு நில்லாமல் மற்றும் அவர்களிடம் ஏதோ விலையுயர்ந்த நகைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டுத் தன் சேவகர்களை விட்டுப் பெண்கள் ஆண்கள் எல்லோரையும் சோதனை போட்டு வீட்டையும் தேடி இருந்தவை எல்லாவற்றையும் தன்னிடம் சேர்ப்பித்துக் கொண்டான்.

கி. பி. 1849-ல் பஞ்சாபை ஆங்கிலேயர் ஜயித்துத் தங்களது இராஜ்ஜியத்துடன் சேர்த்துக்கொள்ளும் வரையில் ரஞ்சித்சிங்கனிடமும் அவனது சந்ததியாரிடமுமே அவ்வைரம் இருந்தது. பிறகு அவ்வைரம் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட விக்டோரியா

மகாராணி அதைத் தரித்திருந்தார். இப்பொழுது ஜார்ஜ் மகிபரின் மனைவி மாட்சிமை தங்கிய மேரி யம்மையார் அதைத் தன் கிரீடத்தில் தரித்துள்ளார்.

ரஞ்சித்சிங்கனது அரசாட்சி: ரஞ்சித்சிங்கன் தனது உத்தியோகஸ்தர்கள் நல்ல உயர்ந்த குடியில் பிரபு வம்சத்தில் பிறந்தவர்களா வென்று கவனிப்ப தில்லை. அவர்களது வேலைத்திறனையே கவனித்து வந்தான். எக்குடியில் பிறந்தாலும், அவரவர்கள், அவர்கள் வேலையைச் செவ்வனே நடத்தி வந்தால் அவர்களுக்கு மேன்மேலும அதிகச் சம்பளமும் கொடுத்துச் சன்மானமும் வழங்கி வந்தான். அப் படி அவர்கள் சரியாக வேலை செய்யாமற் போனால் உடனே அவர்களை நீக்கி வந்தான். சீக்கிய கோயில் களுக்கும், குருமார்களுக்கும் அதிகப் பணம் கொடுத் தான். அவன் பிறமதஸ்தர்களை வெறுக்க வில்லை. அவனது அரசாங்கத்தில் ஹிந்துக்களுக்கும் மகம் மதியர்களுக்குங் கூட உயர்ந்த வேலைகள் கொடுக்கப் பட்டன. அவனுடைய முக்கிய முதன் மந்திரி அஸி ஸுதீன் என்னும் மகம்மதியனே. அவன் அறிவாளி யாக விருந்தது தவிர வைத்தியத்திலும் கைதேர்ந் தவன். ஒரு சமயம் ரஞ்சித்சிங்கன் கண் நோயால் வருந்தும்பொழுது எல்லா வைத்தியர்களும் எவ்வள வோ சிகிச்சைகள் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. அப்பொழுது அஸிஸுதின் வைத்தியம் செய்து சுகப் படுத்தினான். அது முதல் ரஞ்சித்சிங்கன் எவ்விஷய மும் அஸிஸுதீனைக் கேட்டே அவன் சொற்படி நடந்தான். ஐரோப்பியர் களுடனும் மற்ற அயல் நாட்டரசர்களுடனும் ஏதாவது அரசாங்க காரியமாகப்

பேசவோ எழுதவோ வேண்டியிருந்தால் அதற்கு அவிஸாபிதீனையே நியமித்து வந்தான்.

முதன் முதலில், அதாவது ரஞ்சித்சிங்கனுடைய காலத்திற்கு முன் ஸீக்படையில் காலாட்படையைக் காட்டிலும் குதிரைப்படையே சிறந்ததாக விருந்தது. ஆயினும் ரஞ்சித்சிங்கன் காலாட்படையினுடைய மேன்மையை அறிந்து, ஐரோப்பியர்களைக் கொண்டு தன் காலாட் படைகளுக்குச் சண்டைசெய்யப் பயிற்சி செய்வித்துத் தன் காலாட் படையை வலி மிகுந்ததாகச் செய்தான். ஆங்கிலேயருடைய சேனைகள் மிகவும் நன்றாகச் சண்டை செய்வதை நன்கு கவனித்து அவைகளைப் போலவே தன் சேனையையுந தயார் செய்தான். அது முதல் சீக்கியரது காலாட்படை இந்தியாவிலுள்ள மற்றக் காலாட் படைகளைக் காட்டிலும சிறந்ததாக விளங்கலாயிற்று. இப்பொழுதும் ஆங்கிலேயரது இந்தியசேனையில் சீக்கியர்களே முக்கியமாக விளங்குகிறார்கள். மிகவும் பொறுமையுடனும், வீரமுடனும சண்டை செய்வதில் சீக்கியர்களுக்குச் சமானம் எவருமில்லை.

ரஞ்சித்சிங்கன் ஜனங்களிடமிருந்து அதிக வரி வசூல் செய்தான். சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் உபயோகிக்கும சாமான்கள் மேல் கூட வரி போட்டிருந்தான். அரசாங்கத்திற்குத் தலைவன் இவனேயாவன். இவனுடைய சொற்களும் கட்டளைகளுமே சட்டம், வேறு சட்டம இல்லை.

ரஞ்சித் சிங்கனுடைய குடும்பம் :—அனேக மனைவியர்களை மணம் புரிவது அந்நாள் வழக்கமாக விருந்தது

ஆதலால் ரஞ்சித்சிங்கனும் பதினெண்மரை விவாகம் செய்திருந்தான். ஆனால் அவர்களுள் ஒருத்தி பட்ட மகிஷி எனப்பட்டாள். அவள் பெயர் மாதாப் கூர். இவர்களைத் தவிர அந்தப்புரத்தில் அநேக கணிகையர்களையும் ரஞ்சித்சிங்கன் வைத்திருந்தான். அவனுக்கு அக் கணிகை மாதர்கள் மூலம் பிறந்த பிள்ளைகள் அனேகர் இருந்தாலும், மனைவியின் மூலம் ஒரே பிள்ளை பிறந்தது. அவன் பெயர் காரக்சிங்கன்.

## ரஞ்சித் சிங்கனது முடிவு :—

கி. பி. 1838ல் இராஜப் பிரதிநிதியான ஆக்லண்டு பிரபு லாகூருக்கு வந்தபொழுது, ரஞ்சித்சிங்கன் பக்க வாயு உபத்திரவத்தால் மிகவும் அவதிப்பட்டான். அது முதல் மறுவருடம் வரையில் அவன் பட்ட கஷ்டம் சொல்லியும் எழுதியும் சாதரியமல்ல. அப்படிக் கஷ்டப் பட்டாலும் இராஜ்ஜிய விஷயங்களைக் கவனித்தே வந்தான். பல்லக்கிலேறிக்கொண்டு தன்சேனையைப் பார்வையிட அவன் செல்வது வழக்கம். அப்படி அவன் தன் காரியங்களைப் பார்த்துக்கொண்டு வரினும் அவனுக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றுமுள்ள யாவர்க்கும் அவனது ஆயுள் முடியுங் காலம் நெருங்கிவிட்டது எனத் தெரிந்துவிட்டது. இந்திய வைத்தியர்களும் ஆங்கிலேய வைத்தியர்களும் எவ்வளவோ நல்ல மருந்துகள் கொடுத்தும் ஒன்றும் பிரயோசனப் படவில்லை. கடைசியில் தன் படுக்கையருகில் ரஞ்சித்சிங்கன், தன் மகனை வரவழைத்து அவனை தனக்குப் பின் பட்டத்திற்கு வரல்வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான். பிறகுஏழைகளுக்குத் தானம் செய்தும், குரு நானக் பிறந்தவிடமாகிய நங்கானு

விலுள்ள மடத்திற்கு வேண்டிய மான்யம் அளித்தும் தனது 59வது வயதில் கி. பி. 1839 ஜூன்மாதம் 27ம் தேதி சீக்கியர்கள் அவர்களது கிரந்தத்தைப் படிக்க உயிர் நீத்தான்.

ரஞ்சித்சிங்கன் உயிருடன் இருக்கும் வரையில் பஞ்சாப்தேயத்தில் கலகம செய்யும் ஆற்றல் எவருக்கும் இல்லை. ஆனால் அவன் இறந்த பின் நாடுமுழுதும் கலகமும் குழப்பமு மாகவே இருந்தது. காரக்சிங்கனும், அவன் பின் அரசாண்டவர்களும் ரஞ்சித்சிங்கனைப் போல் திறமையுள்ளவர்களல்லர். ஆதலால் நாடு மிகவும் சீர் குலைந்து கொலை களவு முதலியவை நாட்டிற் பொலிந்து பஞ்சாப் மிகவும் பரிதாப நிலையிலிருந்தது. ஆதலால் இராஜப்பிரதிநிதியாக விருந்த டல்ஹௌஸி பிரபு பஞ்சாபை ஆங்கிலேய இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். அதன் பின் நாடு முழுதும் அமைதியாக விருந்தது. ஜனங்களும் கவலையற்று இனிது வாழ்ந்து வரலானார்கள்.

## அருஞ்சொற்குறிப்பு

1. நந்தர்கள்—இவர்கள் கி. மு நான்காவது நூற்றாண்டில் மகதநாட்டை யாண்டு வந்தார்கள். இவ்வம்சத்தில் ஒன்பது அரசர்கள் ஆண்டார்கள்—கடைசி அரசன், மௌரிய வம்சத்துச் சந்திரகுப்தனால் வீழ்த்தப் பட்டான்.

மௌரிய வம்சம்—இவ்வம்சத்து முதல் அரசன் சந்திர குப்தன்—அவன் தாயின் பெயர் முரா. அதிலிருந்து மௌரிய என்று திரிந்து அவ்வம்சத்தின் பெயர் ஆயிற்று. இவ்வம்சத்து அரசர்களில் சிறந்தோன் அசோகன் ஆவன்.

தனயன்—மகன்.

2. உன்னி—எண்ணி.

பெகு—இது பர்மாவில் உள்ள ஒரு சிறிய பிரதேசம்; குதிரைக்குப் பெயர் போனது.

5. அறவே—முற்றிலும்.

தவணை—கால அளவு,

8. மகா மந்திரர்—மகா மத்திரர் எனப்படிக்கவும்.

9. தீர்வை—வரி.

11. ஹூணர்—இவர்கள் ஒரு அநாகரீக சாதியர்கள்—கி. பி. ஐந்தாவது, ஆறாவது நூற்றாண்டிலும், ஏழாவது நூற்றாண்டின் முதலிலும் இந்தியாவின் மேல் படையெடுத்தனர். அவர்கள் பார்வைக்கு விகாரமாகவும், குரூர குணமுள்ளவர்களாகவும் இருந்தனர்.

முறியடித்து—தோல்வியடித்து.

12. உடன்கட்டை யேறல்—இதற்கு சககமனம் என்றும் சொல்லுவார்கள். பண்டைக் காலத்தில் புருஷன் இறப்பின், கற்பிற் சிறந்த அவன் மனைவி கூட

உடன்கட்டை ஏறி உயிர் துறப்பள். இக்கொடுமை யான வழக்கத்தை ஆங்கிலேய துரைத்தனத்தில் பெண்டிங்கு பிரபு நிறுத்தினார்.

ஆக்ஞாபித்தான்—கட்டளை யிட்டான்.

14. ஹியூன் ஸியாங்கு—இவர் ஒரு சீனதேசயாத்திரி. ஹர்ஷன் காலத்து இந்தியாவுக்கு வந்தார். இவர், தான் பார்த்தவைகளை நன்றாகக் குறிப்பித்தார். அக் குறிப்புகள் ஹர்ஷன் காலத்து சரித்திரத்தை அறிய ஒரு பெரிய ஆதாரமா யிருக்கின்றன.

15. சம்மானம்—வெகுமதி.

17. சாலவும்—மிகவும்.

20. குடதிசை—மேற்குத்திசை.

25. பொழில்—சோலை.

பொய்கை—குளம்.

28. வறியார்—தரித்திரர்; ஏழைகள்.

30. நீறு பூசிய மெய்யன்—விபூதியுடன் துலங்கும் சிவ பிரான்.

32. தரணி—பூமி.

33. வனப்பு—அழகு.

37. அழுக்காறு—அசூயை; பொறாமை.

அப்பாஜி—இவர் ஒரு சிறந்த அறிவாளி. இவரது புத்தி சாதுர்யத்தைப் பற்றித் தென்னிந்தியாவில் இன்றைக்கும் அனேக கதைகள் தொன்றுதொட்டுச் சொல்லப்படுகின்றன.

41. முத்திதரும் நகர்கள் ஏழெனச் சொல்லப்படுகின்றன. அவையாவன :— அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.

45. ஐந்துவயதில் அக்ஷராப்யாசம் அல்லது பள்ளிக்கூடத்தில் குழந்தையை வைத்தல், மனுநீதிபிரகாரம் வழக்கமாயிருந்தது. இன்றைக்கும் இவ்வழக்கம் கையாளப் பட்டு வருகின்றது.

46. தேகவியோகம்—மரணம்.

நஞ்சிட்டு—விஷமிட்டு.

49. அவா—ஆசை.

தாதை—தந்தை.

50. பசுக்களை ஹிந்துக்கள் பூசை செய்கிறார்கள். ஆதலால் அவை புனிதமானபிராணிகள். அதுபற்றியே சிவாஜி, மகம்மதியர்கள் பசுக்களைக் கொன்றபொழுது, அவர்களுடன் பொருது அவர்களை வீழ்த்தினான்.

67. வதந்தி=சமாசாரம்.

68. ஸட்லிஜ்—இது, சிந்து நதியின் உபநதி.

70. ஆமத்ஷா அப்தலி — இவன் ஆப்கானிஸ்தானத்தை யாண்ட ஒரு ஆப்கன்—இந்தியாவின் மேல் படையெடுத்து, கி. பி. 1761-ல் மராட்டியர்களைப் பானிபட்டில் தோற்கடித்து அவர்களது ஆதிக்கத்தைக் குலைத்தான்.

71. சாம தான பேத தண்டம்—முக்காலத்தில் அரசர்கள் இந்த நான்கு முறைகளை, ஒருவரை சிக்ஷிப்பதில் கையாண்டு வந்தனர். முதல் முறையாவது சமாதானமாகவும் நல்வார்த்தைகளாலும் குற்றங்களை விசாரித்தல். தானமாவது இனும், வெகுமதி முதலிய கொடுத்து உண்மை சொல்லவோ, அல்லது ஒருவனது நடத்தையைத் திருத்தவோ செய்யல். பேதம் என்றால், பயமுறுத்தியும் அதட்டியும் பார்த்தல். நான்காவது தண்டனை விதித்தல். இதைச் செங்கோல் மன்னர்கள், மற்ற முறைகள் பயன் படாமறபோனால் உபயோகித்து வந்தனர்.

75. கணிகையர்—விலைமாதர்.